

# காற்றோடு சொல்லிவிடு...

—சேஜோர் பாரதி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



உன்னதமான தலைவன் ஒருவனின் உறுதியான வளர்ப்பில் தான் நாம் வந்தோம். அது அனைவருக்கும் தெரியும். உரிமைப்பாதையில் அந்த விடிவெள்ளி எப்போதும் எமக்குத் துணையிருக்கும். இதனால் எமது இலக்கை நாம் என்றோ ஒரு நாள் அதுவும் மிக விரைவில் அடைவோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

-மேஜர் பாரதி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி

100/-

காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி

காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி

காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி

காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி

காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி

காதோடு சொல்லி விடு
மேஜர் பாரதி

காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி

காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# காதோடு சொல்லிவிடு

**மேஜர் பாரதி**
**(சத்தியபாமா விஸ்வலிங்கம்)**

வெளியீட்டுப் பிரிவு

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# காதோடு சொல்லிவிடு

மேஜர் பாரதி
(சத்தியபாமா விஸ்வலிங்கம்)

முதற் பதிப்பு: 1992 புரட்டாதி

வெளியீடு: வெளியீட்டுப் பிரிவு
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு

அச்சுப்பதிப்பு: தாசன் அச்சகம், யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு: 100/-

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# முன்னுரை

பாரதியவர்கள் தனது நாட்குறிப்பொன்றில் ''நான் ஏன் எழுதுகிறேன்''? என்று கேள்வியெழுப்பிவிட்டு ''நான் எனது கவிதைகள் புத்தகமாக வேண்டும் என்ற ஆதங்கத்தில் எழுதவில்லை.'' எனத் தெரியப்படுத்தி,

''நான் எனது அமைதிக்காக எழுதுகிறேன்; என் மனதைத் தொடுகின்ற சில துன்பமான நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்ற ஒரு இதயத்தின் துடிப்புக்கள் தான் இந்த எழுத்துக்கள்'' என்று கூறுகின்றார்.

இக் கூற்றில் ஓர் உண்மை புலப்படுவதை நாம் மறுக்கமுடியாது; போராளிகள் வித்தியாசமானவர்கள்; இவர்களைப் புரிந்து கொள்ளவோ, இவர்களின் உன்னதமான உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவோ எல்லாராலும் முடிவதில்லை; இத்தகைய அறிவு சூன்யமான இந்த உலகத்திற்கு அவர்கள் எதையோ- சொல்லி வைக்க வேண்டி இருக்கிறது; இதனால் அவர்கள் எழுதவேண்டியது அவசியமாகின்றது என்பது;

அதே நாட்குறிப்பில் ''இந்த எழுத்துக்கள் நான் வாழும் இந்தச் சமூகத்தின் இதயத்தில் ஒரு சின்னத் துடிப்பை ஏற்படுத்தினால் அதுவே என் எழுத்தின் வெற்றியென நான் உணர்கிறேன்'' என்று கூறியிருக்கின்றார்.

ஆம், பாரதியின் இக் கவிதைகள் இதுவரை உலகம் அறிந்து கொள்ளாத ஒன்றை அல்லது புரிந்து கொள்ளாத இன்னொன்றைப் புலப்படுத்தி நிற்பதோடு புரட்சி ஒன்று தேவை என்று சொல்லி நிற்கின்றன.

Tamileelam Archive

அன்று கவிச்சக்கரவத்தி கம்பன் தன் சிந்தனைக்கு கற்பனைக் கதாபாத்திரங்ளைக் கருப்பொருளாக்கினான்; கவி நூறு எழுதினான்; காலத்தை வென்று உயிர் பிழைத்து நின்றான்.

ஆனால் இங்கே பாரதி நாலு கவிதையே எழுதினார். நாலிற்கும் கருப்பொருள் தானேயாகினாரன்றி கதாபாத்திரங்களைக் கற்புனையாகப் படைக்கவில்லை.

கவிதையில் துலங்கும் உண்மைப் பொருள் வாழ்வதற்காய் தன்னுயிரையேதான் அளித்தார்.

பாரதி தன் கவிதையின் உயிரான உணர்வுகளை இங்கே பேனாவால் வடிக்கவில்லை. உதிரத்தால்தான் வடித்திருக்கின்றார்.

இவ்வாறு ஒப்பு நோக்குகையில்
அன்று கம்பன் வாழ்ந்த காலம் எங்கே?
இன்று பாரதி வாழ்கின்ற காலம் எங்கே?
இரண்டுக்கும் நிறையவே இடைவெளி இருக்கின்றது.

இந்தக்கால வேறுபாடுகள் இரண்டும் இன்று தமிழீழத்தில் ஒரு மகத்தான புரட்சி முகிழ்ந்திருப்பதையே எடுத்துக் காட்டுகின்றன.

இந்தப் புரட்சியுகத்தின் ஒப்பற்ற கவிஞர்களாகவே பாரதியோடு அவரின் தோழர்களான கஸ்தூரியும், வானதியும் தமிழீழ வரலாற்றில் எழுந்து நிற்கின்றார்கள்.

புதுக்கவிதை அமைப்பானது இன்றைய காலத்தின் பிரசவிப்பாகவுள்ளது; பாரதியின் கவிதைகளும் அவ்வாறே வெளிப்பட்டிருக்கின்றன.

இக்கவிதைகளைப் படிக்கின்றவர்களில் பாரதியின் நோக்கு நிலையில் இருந்தது அன்றி மறுதலையாக நின்று புரிந்து கொள்ள முயல்பவர்களுக்கு பாரதி கூற வந்த உண்

Tamileelam Archive

மைப் பொருளும் அதில் பொதிந்திருக்கும் சொல் நேர்த்தியும் ஓசை நயமும் புலப்படப்போவதில்லை; இதன் கால் இந்த எளிய கவி நடையை, உரைநடையென்று புறந்தள்ளல் பொருத்தமற்றது; புரட்சி யுகத்தின் புதிய கவிதை இலக்கியங்கள் இவை என்பதை மறுக்க முடியாதுள்ளது.

பாரதி இந்த உலகத்தை இமயத்தின் சிகரத்தில் நின்று அல்ல அதற்கும் மேலான இடத்தில் நின்று உற்று நோக்கியிருப்பதை இக் கவிதையைப் படிப்பவர்கள் உய்த்தறிய முடியும்.

ஒவ்வொரு தலைப்பிற்குரிய கவிதையும் தனித்தனிப் பாடப்புத்தகங்களாகவே வியாபித்து நிற்கின்றன.

தமிழீழ விடுதலையின் ஒவ்வொரு பக்கத்தையும், அதாவது கரும்புலிகளின் கனவையும், களத்தையும் போராளிகளின் தன்மானத்தையும் தற்கொடையையும் இன்னும் பலவற்றையும் மிக அழகாக உண்மையாகப் பாடிய பாரதியை இங்கு பாடாமல் இருக்க முடியவில்லை.

ஏகாதிபத்திய மிங்கேறி நின்று
இடிக்கின்ற இடிக்குள்ளும்
வெடிக்கின்ற வெடிக்குள்ளும்
கொட்டுகின்ற செந்நெருப்புள்ளும்
நின்று நீறாகிப் போகாமல் — பகை
வென்று பாராகி தாங்கியவர்தம்
பாதம் பட்ட மண்பட்ட பாட்டினைப்
பாடிடப் பாவலர் யார்க்குமியலுமோ
பகை முடித்தவர் பாதம் தொடர்ந்தவரெம்
பாரதியே அதை செய்யும் பாக்கியம்
பெற்றவராமென்றுநாமுரைத்திடல்பொய்யாமோ!

இளைய, தலைமுறையின் மீது தமிழீழக் குழந்தைகளின் மீது பாரதி கொண்ட பற்று, தனிப்பற்று அது தாய்மைக்கு நிகரானது என்பதை அவரின் ''எய் குழந்தாய்!

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

''ஏன் அழுகிறாய்?'' என்று தொடங்கும் கவிதையும்,

''குற்றப் புண்கள்
சுமந்த மேனியும்'' என்று தொடங்கும்

கவிதையும் மிக ஆழமாக விளக்கி நிற்கின்றன.

பாரதியின் ஒவ்வொரு கவிதை பற்றியும், அதில் பொதிந்துள்ள பொருள் பற்றியும் இங்கே சொல்வது இயலாதாயினும், அவரின் கடைசி நாட்குறிப்பு என் இதயத்தில் சுமையாகவே இருக்கின்றது.

''ஓ! வாழ்க்கைதான் எத்தனை இனிமையானது'' இது பாரதியின் கடைசி நாட்குறிப்பு.

பாரதியின் வாழ்க்கை முடிந்ததோ தமிழீழ எழுச்சியின் சரித்திரத்தில்; தமிழீழ எழுச்சியின் முடிவோ இனத்தின் விடுதலையில்; விடுதலையின் முடிவோ வாழ்வின் தொடக்கத்தில்; இப்பொழுது பாரதி இருப்பதோ?

கவிஞராகவல்ல, போராளியாகவல்ல, தியாகியாக வல்ல, தீர்க்க தரிசியாக வல்ல, இவை எல்லாமுமாகி வாழ விளைபவர்களின் அகத்தில் நம்பிக்கையாக என்பதே பொருத்தமாகும்.

''முதலில் மனிதராய் வாழ
முயற்சி செய்வோம்
முடியாவிட்டால்
புரட்சி செய்வோம்'' இதையும் பாரதியே சொன்னார்.

—சுடரவள்

பெண்கள் புனர்வாழ்வு நிறுவனம்

**விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# மேஜர் பாரதி

## சத்தியபாமா விஸ்வலிங்கம்

## கல்லுவம், கரவெட்டி.

பிறப்பு: 1965—12—20

வீரச்சாவு: 1992—06—07

சிறுநாவற்குளத்திலுள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் எல்லைக்குள் தவறுதலாகப் பிரவேசித்தபோது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்தார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# மேஜர் பாரதி



சாவா ? நாம்
சந்திப்போம்.
வாழ்க்கை எமக்கென்ன
பூவா ? நாம்
போராடுவோம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஒரு அன்னையின் நினைவில்...

# மேஜர் பாரதி

இடியாய் வந்து காதில் விழுந்த செய்தியின் தாக்கத்தில் இதயம் ஒரு கணம் துடிப்பை மறக்கிறது.

நீ போய் விட்டாயாம்!

'சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா' என்று பாடியவனுடைய பெயரை உனது இயக்கப் பெயராக நீ தான் வைத்துக்கொண்டாயோ அல்லது வேறு யாராவது வைத்தார்களோ...

பெயர் உனக்கு மிகவும் பொருத்தமானது தான்.

'சிறுமை கண்டு பொங்கும்' அந்தக் குணத்தினால்தான் உன்னை எனக்கு மிகவும் பிடித்தது.

உன்னுடைய தனித்தன்மை அது.

அதுவே உனது பலம்.

ஏன்...அதுவே உனது பலவீனமும் கூட.

நெற்றிக் கண்ணைக் காட்டியவர்களுக்கு நக்கீரனாய் நின்றாய்...இந்த நக்கீரத்தனம் உனக்கு வாங்கித்தந்த பெயர்-

'குழம்பல் கேஸ்'

பாரதி...

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

குழந்தைத்தனம் மாறாவிட்டாலும் ஆழ்ந்து சிந்திக்கத் தெரிந்த குழந்தை நீ.

உனது பண்புகளிலே இரண்டறக் கலந்திருந்த 'மனிதம்...'

அந்த 'மனிதமும்' உன்னிடம் என்னை ஈர்த்தது.

நீ போய் விட்டாயாம்...

செய்தி கேட்ட விநாடியிலிருந்து உன் நினைவுகளின் அசை போடுதல் என் மனதை அடிக்கடி ஆக்கிரமிக்கிறது.

இது- அசைபோடுதல்- மனதுக்கு ஆறுதலைத் தருகிறது.

வாசல் கதவின் 'கிறீச்' உடன் சேர்ந்தே ஒலிக்கும் ஒரு குரல்... "அன்ரீ..."

அந்தக் குரல்... அது நீ தான் என்பதை எனக்கு இனங் காட்டும். வாசலுக்கு விரைந்து வருவேன். நான் வீட்டில் இருப்பது நிச்சயமான பிறகுதான் உள்ளே வரப் படிகளில் கால்வைப்பாய்...

படிகளில் ஏறுகையில் அழகாகச் சிரிப்பாய்...

உனது அந்தச் சிரிப்பு -

பாசத்துடன் 'அம்மா' என்று என்னை மெளனமாய் அழைக்கும்.

'கனநாளாய் உங்களிட்டை வரேல்லை... கோவிக்கா தேங்கோ... நேரமில்லை... அதுதான்...' என்று என்னிடம் மன்னிப்புக்கோரும்.

இன்னும் இன்னும்... எத்தனையோ அர்த்தங்கள் உனது சிரிப்பில் தேங்கி நிற்கும்.

உள்ளே வந்து கதிரையில் அமர்ந்து கால்களைத் தூக் கிச் சப்பணம் போட்டுக் கொண்டாய் என்றால் - அன்று என்னோடு ஆறுதலாகக் கதைக்கப்போகிறாய் என்பது அர்த்தம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போராட்டம் தொடர்பான மக்களின் நிலைப்பாடு பற்றிக் கேட்பாய்....

தத்துவம் கதைப்பாய் ...

''ஆதரவற்றதெல்லாம் அனாதைதான்...அந்தவகையில் உண்மையும் கூட ஒரு அனாதையே..." என்று ஒரு வாக்கியம் ஒரு புத்தகத்தில் வாசித்ததை ஒரு நாள் உன்னிடம் சொன்னேன்.

உடனே நீ என்னசொன்னாய் தெரியுமா?

''அப்பிடியெண்டா நான் எப்பவுமே அனாதையாவே இருக்கிறதைத்தான் விரும்புறன் அன்ரி...''

நீ எப்படிப்பட்டவள் என்பதை அடையாளம் காட்ட இது போதும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் அனுமதி கிடைத்து, முதலாம் வருட மாணவியாய் நீ இருந்த காலத்திலேயே உன்னை எனக்குத் தெரியும்.

இயக்கத்தில் நீ இணைந்துகொண்டாய். ஆனால் ஆயுதப் பயிற்சி எடுக்காமல் இருந்த காலம் அது.

1988 ஆம் ஆண்டு இறுதிப்பகுதி. இந்திய ஆக்கிரமிப்புப்படை எம் மண்ணில் உலவி வந்த காலம்.

காடுகளிலும் நாட்டிலுமாய்ப் போராளிகள் கரந்துறைந்திருந்தார்கள்.

பயிற்சி எடுக்கவேண்டும் என்ற எண்ணம் உனக்கு ஏற்பட்டு விட்டது.

ஆனாலும் ஏதோவொரு 'குழப்பநிலை' உன்னிடம் இருந்ததை என்னால் உணர முடிந்தது.

''கட்டாயம் நான் பயிற்சி எடுக்கவேணும்'' என்று திடமாக ஒரு நாளைக்குச் சொல்லுவாய்.

Tamileelam Archive

''இப்ப பயிற்சி எடுக்கப் போகட்டோ அல்லது கொஞ் சக்காலம் செல்லப் போகட்டோ'' என்று மறுநாள் அங்க லாய்ப்பாய்...

அது ஏனென்று அன்று எனக்குப் புரியவில்லை.

உன்மேல் கோபம் கூட வந்திருக்கிறது எனக்கு.

ஆனால்...உனது குடும்பநிலை அப்போது எனக்குத் தெரியாது.

பின்னர் அதை அறிய நேர்ந்தபோது..

நீ ஒரே பிள்ளை.

இரத்த அழுத்த நோயாளியான தந்தையும், வயது சென்ற தாயுமாய் உன்னையே - உன்னை மட்டுமே - தங் கள் வாழ்வின் நம்பிக்கை ஒளியாய் நம்பியிருந்த ஏழைப் பெற்றோர்...

படித்து முடித்து நீ குடும்பத்தின் பசி தீர்ப்பாய் என்று நம்பியிருந்த அந்தப் பெற்றோருடைய நிலையே உன்னைச் சிறிது குழம்ப வைத்தது என்ற உண்மையைப் புரிந்து கொண்டேன்.

அதனால் தானோ என்னவோ உனது குடும்பத்தைப் பற்றி நான் விசாரித்த நாட்களில் எல்லாம் வெறுமனே சிரித்து மழுப்பியிருக்கிறாய்..

உன்னைத் தவறாக நினைத்ததற்கு மானசீகமாக உன் னிடம் மன்னிப்புக் கோரினேன்.

ஆனால் பின்னர் நீ தெளிந்து விட்டாய்...

ஒன்றல்ல... இரண்டல்ல... தமிழீழம் முழுவதுக்குமாய் இன்று எத்தனை பெற்றோர் உனது பெற்றோருடைய நிலையில் இருக்கிறார்கள் என்ற யதார்த்தம் தான் உன்னை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

1989 ஆம் ஆண்டு தைமாதம் பயிற்சிக்குப் போனாய்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பயிற்சி முடித்து நீ வந்த பிறகு, முதல் முதல் உன்னைக் கண்ட போது உன்னில் தெரிந்த மாற்றம்-

குழந்தைத்தனம் மாறாத அந்த முகம் அப்படியே இருக்க, உனது கண்களில் புதிய உறுதியும் தெளிவும் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன.

பெருமிதமாக இருந்தது எனக்கு.

போரில் காயப் பட்டு, சிகிச்சைக்குப்பின் மருத்துவப் பிரிவில் நீ இருந்தபோது, ஒருநாள் உன்னைப் பார்க்க வந்த பெற்றோர் உனக்காக இறைச்சிக் கறியுடன் சோறு கொண்டு வந்தார்கள். அன்று அந்த உணவைச் சமைத்துக் கொண்டுவர அவர்கள் என்னென்ன கஷ்டங்கள் பட்டார்களோ .. அது உனக்கும் தெரிந்த விஷயம் தானே?

நீ என்ன செய்தாய்?

''என்னோடை இன்னும் எத்தினைபிள்ளையள் இங்கை இருக்கினம்? நீங்கள் எனக்கு மட்டும் ஒரு சாப்பாடு கொண்டுவாறது என்னநியாயம்? எனக்கு வேண்டாம். திருப்பிக் கொண்டு போங்கோ'' என்று கடுமையாக ஏசி உன்னைப் பெற்றவர்களுடன் எதுவும் கதைக்காமலேயே திரும்பி உள்ளே போய் விட்டாய்..

பாரதி...

இதைப் பிறகு நான் கேள்விப்பட்ட போது.. உன்மீது நான் கொண்டிருந்த மதிப்பு மேலும் உயர்ந்தது.

உன் ஒருத்திக்கு உணவு கொண்டு வருவதற்கே எத்தனையோ கஷ்டப்பட்டிருக்கக்கூடிய உன் பெற்றவர்கள், உன்னுடன் இருந்த எல்லோருக்கும் சேர்த்து உணவு கொண்டு வருவது சாத்தியமான காரியமில்லை என்பது உனக்குத் தெரியும்...

உனது புறக்கணிப்பு பாசமிகு அந்தப் பெற்றோரை மிகவும் புண்படுத்தியிருக்கும் என்பதும் நிச்சயம் உனக்குத் தெரியும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆனாலும் உனது சக போராளிகளிடம் நீ வைத்த பாசம், அவர்களுடைய மன உணர்வுகளுக்கு நீ கொடுத்த மதிப்பு இவையே உன்னை அப்படி நடக்க வைத்தன.

ஆனால் பாரதி - உன்னைப் பெற்றவர்களை அப்படித் திருப்பியனுப்பிய பிறகு உனக்குள்ளே நீ அழுதிருப்பாய் என்பதை நிச்சயமாய் நான் அறிவேன்.

மற்றவர்களின் துன்பங்களைப் பற்றிக் கூறும்போதே கண்கலங்கி விடுகின்ற உனது மென்மையான மனம் எனக்குத் தெரியும்..

நிதர்சனம் நிறுவனம் நடாத்திய கவிதைப் பயிற்சி வகுப்புக்களில் நீயும் கலந்து கொண்டாய். ஒரு நாள்-

அன்று ஆசிரியராக வந்தவர் புதுக்கவிதை, மரபுக் கவிதை ஆகியவற்றை விமர்சித்துக் கொண்டிருந்தார். 'புதுக்கவிதை என்பது சிறந்த கவிதை வடிவமல்ல. அது என்றுமே நன்றாக அமைவதில்லை, என்ற ஆசிரியரின் கருத்துடன் உனக்கு முரண்பாடு தோன்றியது. வாதம் தொடர்கிறது...

''அப்படியெண்டால் வானதியின்ரை கவிதையைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று நீ கேட்டாய்...

''அது ஏதோ தற்செயலாக நன்றாக அமைந்து விட்டது,'' என்றார் ஆசிரியர். உனக்குக் கோபம் வந்திருக்க வேண்டும்...

''ஒரு போராளியின்ரை மன உணர்வுகளை அப்படியே வெளியிலை கொண்டு வரக்கூடிய ஆக்கம்தான் எங்களுக்கு இண்டைக்குத் தேவை அதுதான் இலக்கியம். புதுக்கவிதை, மரபுக்கவிதை எண்ட எல்லைகளுக்கை எங்கடை உணர்வுகளைக் கட்டுப்படுத்த ஏலாது..'' எழுந்து நின்ற நீ இப்படிச் சொல்கிறாய்.

உனது கண்களில், பேச்சில் - தெறித்துவிழுந்த சத்திய ஆவேசம் என்னைச் சிலிர்க்க வைக்கிறது...

சத்திய பாமா...

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அதுவும்கூட உனக்குப் பொருத்தமான பெயர்தான்.

'அண்ணை' என்று நீ சொல்லும்போது - தலைவர் மீது நீ கொண்டுள்ள பக்தி, வைத்திருக்கும் பாசம், விசுவாசம் யாவும் ஒருங்கே வெளிப்படுவதை யாரும் உணர்ந்து கொள் வார்கள்.

"அண்ணையை ஒருக்காக் கண்டால், அண்ணை யோடை ஒரு தரம் கதைச்சால் அது ஊக்க மாத்திரை போலை. அந்த மாத்திரையோடை கன காலம் சந்தோச மாய் வேலை செய்யலாம்"

என்று அவ்வப்போது நீ கூறியதை நினைத்துப்பார்க் கிறேன்... தலைவரின் படம் மேல் மட்டையில் ஒட்டியபடி உள்ள உனது தினக்குறிப்பை மிகவும் கவனமாகக் கீழேகூட வைக்காமல் உன்னுடனேயே வைத்திருப்பாய் .. 'இது... என்ரை பொக்கிஷம். நான் செத்த பிறகு இந்த டயறியை அண்ணை பார்க்கவேணும்..." என்று அடிக்கடி சொல்லு வாய்.

பாரதி ..
நீ போய் விட்டாயாம்...
சொல்கிறார்கள்.

நான் அப்படி நினைக்கவில்லை. எங்கள் மண்மீட்புக் காக ஊற்றெடுத்துப் பிரவகித்த உனது உணர்வலைகள் நித்தியமாயும் சத்தியமாயும் இந்த மண்ணில் மோதிக் கொண்டேயிருக்கும்...

நீ மீட்டெடுக்கப்புறப்பட்ட....
இந்த மண்ணில்,
எங்கள் சொந்த மண்ணில்,
தமிழீழ மண்ணில்,

'பாரதி' என்ற உனது பெயர் என்றும் சாஸ்வதமாய் வாழ்ந்து கொண்டிருக்கும்

—திருமதி சாவித்திரி அத்துவிதானந்தன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## நான் ஏன் எழுதுகிறேன்?

'எழுத்துலகில் எனது பெயர் பொறிக்கப்பட வேண்டும் என்பதற்காக நான் எழுதவில்லை. மனச்சுத்தியுடன் எழுத்தை மட்டும் பார்த்து விமர்சிக்கின்ற ஒரு நேர்மையான விமர்சகனால் என் எழுத்துக்கள் பாராட்டப்பட்ட பொழுதுகளில் என் ஆத்மா சந்தோசப்பட்டதுண்டு. அதேபோல் அவர்கள் சுட்டிக் காட்டும் திருத்தங்களை ஏற்கும் மனப்பக்குவமும் எனக்குண்டு. என் எழுத்துக்கள், நான் வாழும் இந்தச் சமுகத்தில் ஒரு சின்னத் துடிப்பை ஏற்படுத்தினால், அதுவே என் எழுத்தின் வெற்றியென நான் உணர்கிறேன்.

— மேஜர் பாரதி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# என் இனிய தேசமே

என் இனிய தேசமே!
குறிப்பெடுத்துக் கொள்.

எரியுண்டு
சிதையுண்டு போன
என் தேசத்தின்
காப்பகழி ஒன்றில்
எழுகின்ற
உணர்வு அலைகளை
குறிப்பெடுத்துக் கொள்.

இந்தத் தேசத்தை
எப்படி நான்
நேசித்தேன் என்று
தெரியுமா உனக்கு?

என் தலைமையை
எப்படி நான்
தெரிந்தெடுத்தேன் என்று
தெரியுமா உனக்கு?

கீழ்வானம் எமக்கு
எப்போது சிவக்கும்?
என் இதயத்தின் துடிப்பிது.
கேட்கிறதா உனக்கு?

என்னால்
விளங்கப்படுத்த முடியவில்லை.
ஆனாலும்
என் தேசமே
குறிப்பெடுத்துக் கொள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இன்னும்
என்
அம்மா என்ற பெயரில்
உயிரோடு உலாவும்
எலும்புக் கூட்டை
நீ
கண்டிருக்கிறாயா?
ஆம்! கண்டிருப்பாயானால்
நடைப்பிணமாய் திரியும்
அதன் கால்கள்
நிச்சயம்
உன் மடியில்
பதிந்திருக்கும்.

வாழ்வின்
பற்றுக்கோட்டினை
தேடி அலையும்
இந்த எலும்புக்கூடு
தினம் தினம்
என் நினைவில்
வந்து போனாலும்
இன்னும் எதன்மீது
அன்பு செலுத்துகிறேன்
தெரியுமா உனக்கு?
தெரிந்து கொள்.
உன்மீதுதான்.

இருண்டு போயிருக்கும்
என் தேசத்தில்
ஏற்றப்படும்
விடுதலைத் தீபத்துக்கு
என் உயிரும்
எண்ணெயாய்
ஊற்றப்பட வேண்டும்.
குறிப்பெடுத்துக் கொள்
என் தேசமே
குறிப்பெடுத்துக் கொள்.

★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# நீங்கள் பதித்த பாதச்சுவடுகளில்

இன்று
தமிழீழ அன்னை
மௌனமாக தலைகுனிகின்றாள்.
நாணத்தால் அல்ல.
எம்
தேச விடுதலைக்காய்
போன புதல்வர்கள்
வீடு திரும்பாது
வீரமரணமடைந்த
வரலாற்றின் நிகழ்வுகளை
நெஞ்சில் நிறுத்தி
வீர அஞ்சலிக்காய்
தமிழீழ அன்னை
மௌனமாக
தலை குனிகின்றாள்.

தமிழீழ வரைபடத்தை
உங்கள் குருதியால்
வரைந்து
வரித்துக் கொண்ட
இலட்சியத்திற்காய்
உண்மை விடுதலைக்காய்
உயிரை உவந்தளித்த
தியாகத்தின்
விளக்கக் குறியீடுகள்
நீங்கள்.
எங்கள்
தேசவிடுதலைக்காய்
உங்கள் தேகம்
சல்லடையாகியது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வரண்டு போன
எங்கள்
வயல்களில்
நீங்கள்
தடம் பதித்த பாதச் சுவடுகளில்
அணி அணியாய்
நாம்.
இலட்சிய
மலை உச்சியை அடைய
ஏறிவரும்
எங்களுக்கு
உங்கள் மரணங்கள்
சுதந்திர ஒளிவீசும்
படிக்கட்டுக்கள்.

போராட்டச் செடியில்
புஷ்பித்த
புரட்சி மலர்கள்
நீங்கள்
செடியை வளர்க்க
எருவாகி விட்டீர்கள்.
எருவாகி விட்டாலும்
மலர்க்காம்பில்
போராட்ட விதைகளை
உருவாக்கி விட்டீர்கள்.
ஒரு நாள்
விதை விழுந்து
முளையாகிச் செடியாகும்.
அப்போது
தளிர் துளிர்த்து
மீண்டும்
புதுமலர்கள் புஷ்பிக்கும்.
அம்மலர்கள் நாளை
அன்னை விலங்கொடிக்கும்.
வருகின்ற
தமிழீழத் தடாகத்தில்
மலர்ச்சியுடன்
உங்கள் முகம் தெரியும்.
இது உறுதி. ★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# விடிவிற்காய் எழுவோம்

இரவொன்று கரைந்து போக
இன்னும் சில நேரம் மீதமிருக்கும்
புதுநாளின் பிறப்பிற்காய்
புள்ளினங்கள் பாட்டுப் பாடும்
ஒரு அதிகாலைப் பொழுது அது.
பனிமழையில் நனைந்தெழுந்த
பனைமரங்கள் சிலிர்த்து நிற்கும்,
பற்றைகளும் கூட - ஒரு
புத்துணர்ச்சி பெற்றிருக்கும்,
பட்டாசு வெடி போல
கிட்டவாய் சத்தம் எழும்
முன்னுக்கு பின்னுக்கு
முதுகிற்கு மேலாக - எம்
உயிரைத் தொட்டணைக்க
உலங்கு வானூர்திக் குண்டு துடிக்கும்.

இன்று வரை அருகிருந்து
அம்மாவின் கதை சொன்ன
அன்பு நண்பியின்
ஆயுதம் அணைத்திருந்த
கரம் விறைத்து விழும்,
செங்குருதி இம் மண்ணில்
புதிதாய் படம் வரையும்.

இம் மண்ணின்
இளம் புதல்வி ஒருத்தியின்
உயிர் இழந்த உடலொன்று
எம்முடன் இருக்கும்.
கனல் கக்கும் எம்விழிகள்
கலங்கி இருக்க - அவள்
கைப்பிடித்த துப்பாக்கி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கரம் மாறும்.
சட சடக்கும்
எம் வேகம் அதிகரிக்க
பட்டாசு வெடிச் சத்தம்
தூரக் கேட்கும்.

பெற்றெடுத்த புதல்வி
பெருமகளாய் போனதனால்
பூமித்தாயின் சோகநிலையாய்
மௌனம் பிறப்பெடுக்கும்
சிதைந்து போன பனைமரமும்
சிறகொடிந்த குருவிகளும்
பற்றி எரிந்த பற்றைகளும்
எம் மண்ணின் விடுதலைக்காய்
ஏந்திய வடுக்களால்
இன்னும் நிமிர்ந்து நிற்கும்.

குச்சொழுங்கைக் குறுணிகளும்
குவிந்திருந்து குண்டுகளாய் மாற
தீர்மானம் எடுக்கும்,
குருதிச் சேற்றில்
பதியும் என்கால்கள்
குறிக்கோளை நோக்கி
விரைந்தோடும்.
நினைவுகளைத் தாங்கும்
என் விழிகள்
அடுத்த விடியலுக்காய்
காத்திருக்கும்.

★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# காதோடு சொல்லி விடு

பூமிப் பந்தின்
புவியீர்ப்புக்கு அப்பால்
பிரபஞ்ச வெளியையும்
பிய்த்துச் சென்றது
மீண்டும் ஒரு
வெடி அதிர்வு.

ஒலி அலையை
முந்திச் சென்ற
ஒளி அலைகள்
வெளிச்சத்தைப் பற்றி
விண் மீன்களுக்கு
விளங்கப்படுத்தின.

எம்
அன்னை பூமியில்
அழிவுகளை மட்டுமே
பிரசவிக்கத் தெரிந்ததுவாய்
தரித்து நின்ற
தாய்க் கப்பலை
தகர்த் தெறிந்த
இலட்சிய வீரரின்
இறுதி மூச்சின்
வெப்பத்து வீச்சால்
இந்து சமுத்திரம்
இன்னுமொரு தரம்
பொங்கித் தணிந்தது.

ஆம்!
தேசத்தின் புதல்வர்களே
தேடிப் பாருங்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்த
சுதந்திரச் சிற்பிகளின்
சுவடுகள் இங்கேதான்.

எங்கே?
கர்வப்பட்டுக் கொண்டிருக்கும்
இந்தப் பூவுலகின்
கண்களெல்லாம்
கண்டு பிடிக்கட்டும்
அவர்களது
கடுகளவு உடற்கூறை
பெருமையோடு
உரிமை கொள்வோம்
இவர் தாம்
மானுடத்தின் தோழரென்று.

உலகத்து
மொழி பெயர்ப்பாளரை
உடனேயே அழையுங்கள்
முடிந்தால்
எங்கள் தோழரின்
உள்ளத்து உணர்வுகளை
உரத்து
மொழி பெயர்க்கட்டும்.

ஆராய்ச்சியாளருக்கெல்லாம்
ஓர்
அவசர வேண்டுகோள்
உங்கள்
ஆராய்ச்சிக் கூடங்களில்
இந்த
அர்ப்பணிப்புகளை
ஆராயுங்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆர்ப்பரிக்கும் கடலலையே
அடிபணிந்து விட்டோம்.
இவர்களின்
இலட்சிய தாகத்தை
நீயே கூறு.

தானைத் தலைவனின்
பாசப் பகிர்வின் பின்
பாதி இரவும்
மெதுவாகக் கழிய
கரிய இருளில்
காற்றோடு காற்றாய்
கரைந்து போனதை
கடைசியாய்க் கண்டது
நீ தானே?

வெடிமருந்துப் படகோடு
இவர்களுக்களித்த
இறுதித் தாலாட்டும்,
ஈரமுத்தமும்
உன்னுடையதுதானே?

அன்னையை விட
அவர்களை
அதிகமாய் அணைத்தது
நீ தானே?

அதனால் தான்
உன்னிடம்
உரிமையோடு கேட்கிறோம்.
கடலலையே
நீ
கரையைத் தொடும் போது
எம்மக்களுக்கு
காதோடு சொல்லி விடு
விடுதலையை வென்றெடுங்கள்
அப்போது
அவர்கள் வருவார்கள் என்று. ★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# சூரியக் குழந்தை

மானுட இதயம்
மறுபடி ஒருதரம்
துளையிடப்பட்டதால்
துடிப்புடன் எழுந்தது.

அன்றொரு நாள்
எண்பத்தியேழில்
எங்கள் மண்ணில்
அமைதி என்பது
வழமை போலவே
முழு நிர்வாணமாய்
மேடையேறியது.

அமைதி முகமூடி
அறிந்திடா மனிதர்
திரை விலகுதற்காய்
நிரை நிரையாக
திரண்டிருந்தனர்.

கணப் பொழுதுதான்.
திரை விலகிட
ஆவல் பொங்கிய
அப்பாவி முகங்கள்
குருதி வழிந்து
கோறையாய்ப் போயின.

மானுட இதயம்
மறுபடி ஒருதரம்
துளையிடப்பட்டதால்
துடிப்புடன் எழுந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எங்கள் மண்ணில்
சுதந்திர தீபம்
சுடர் விட்டெழும்ப
உயிர் எண்ணெய்
உருகி வழிந்தது.

வழிந்ததில் ஒருதுளி
ஏந்திய இனங்கள்
இலட்சிய நெருப்பை
இதயத்தில் ஏந்தின.

திலீபன் என்ன
தமிழினத்தின் தனிமகனா?
இல்லவே இல்லை.
உலகத்தின் தோள்களில்
உலாவரும் சூரியக் குழந்தை

கிழக்கு எமக்கு
கெதியாய்ச் சிவப்பதற்காய்
இவன் குருதி
அடிவானை நோக்கி
ஆவியாய் போனது.

அடிமை இருளின்
அடர்த்தி குறைந்தது
இவன் உடலிலிருந்து
விடை பெற்ற மூச்சில்
அன்றாடம் அன்றாடம்
அது கரைந்து கொள்வதால்.

காற்றிடை வெளியிலெம்
கண் முன்னாலொரு
கடத்தல் நிகழ்ந்தது.
ஒளி எனும்
பெரு வெளிச்சம்
இவன் கண்ணிலிருந்து
எம் மண்ணுக்குப் பாய்ந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மானுட இதயம்
மறுபடி ஒருமுறை
துளையிடப்பட்டதால்
துடிப்புடன் எழுந்தது.

மனித இதயங்களே,
கவனப் படுத்துங்கள்
இவன் காலடிச் சுவடுகளை.
ஏனென்றால்
அன்றைய அவனது
பாதப் பதிவுகள்தான்
புதிய பூமியின்
நீள் வட்டப் பாதை.
தன்னைத்தானே
சுழற்றும் பூமியின்
சுழற்சி அச்சும்
இவனேதான்.

கால நெருப்புக்குள் இவன்
கருகுண்டு போவானா?
எப்படி முடியும்?
கால நெருப்பு இவன்
கைகளுக்குள்ளேதானே
கட்டுப்பட்டிருக்கிறது.

நாளைய உலகின்
விடியற் பொழுதில்
எல்லாமும் இவனாய்
ஆகிப் போகின்ற
நிகழ்வினை இங்கு
சூல் கொள்ள வைத்தமைக்காய்
பூமியில் பாரதம்
பொருமியபடியே
குனிந்து நிமிரட்டும்.

★

தமிழீழ ஆவணகம் Tamileelam Archive

# பூபதிக் கோல்

வல்லரசொன்று
வரலாற்றுப்பாதையில்
வழி தவறிப்போனது

காக்கி உடைகளும்
கவச வாகனங்களும்
பிளந்தவாய் மூடாத
பீரங்கிக் குழாய்களும்
அமைதித் தோழனின்
மெய்க் காவலராய்
தாயக மண்ணில்
காலடி வைத்தன.

ஆதிக்கச் சவ்வுகள்
மூடி மறைத்ததில்
விழிகள் இழந்த
இந்திய அரசு
இருட்டினில் நடந்தது.

எங்கள் நாட்டில்
பிணங்கள் மீதொரு
பாதை அமைந்தது.
பாதை நெடுகவே
விலத்த முடியாது
உடல்கள் உருண்டதில்
அசோகச் சக்கரம்
அசைய மறுத்தது.

பாரதக் கொடி
பறந்து கொண்டிருந்த
உச்சிக் கம்பத்தில்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

உரிமை கேட்ட
ஈழத்தமிழரின்
சதைகள் கொத்திய
கழுகுகள் இருந்து
அலகுகள் சொறிந்தன.

மண்ணினைக் காத்த
மனித உயிர்களின்
கரைசல் விட்டதால்
இந்த பூமியில்
ஆதிக்கச் சவ்வுகள்
கரைந்து அழிந்தன.

விழி திறந்ததும்
வடக்கு நோக்கி
வல்லரசு போனது.

சுதந்திர நாடுகள்
மனித உரிமையின்
மகத்துவம் பற்றியும்
பேசிக் கொள்கையில்
அங்கீகரிக்கப்படாத
என் தேசமோ
பூபதி என்ற
புதிய கோளினை
தியாகச் சுடராய்
திரண்டெழச் செய்தது.

ஏனைய கோள்கள்
வழமைபோல் இருக்க
பூபதிக் கோளோ
கண்ணுக்குத் தெரியாத
கதிர்களின் வீச்சால்
அநீதியை எல்லாம்
அழித்துச் செல்லும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புதைக்கப்பட்ட இவள்
புகழுடம்பானது
பூகம்பக் கூட்டத்தின்
தலைமையை ஏற்று
பூமிக்குள்ளே
புதிய பாதையை
வகுத்துக் கொள்ளும்.

முகர்ந்து பிடிக்கும்
பூகம்ப மூச்சில்
அடக்கு முறைகளின்
இருப்பிடங்களில்
நிச்சயம் ஒரு
நிலநடுக்கம் வரும்.

முடிவில்
உலக விடுதலைக்
கொடியை ஏற்ற
பூபதிக் கோளை
பூமிக்கு வரும்படி
நாடுகள் சேர்ந்தொரு
அழைப்பு விடுக்கும்.

அப்போது
பூகம்பமெல்லாம்
பூமியைச் சுமக்கும்
பூக்களாய் மாறி
வாழ்த்தினைக் கூறட்டும். ★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# தேசத்தின் வாழ்வில் ...

என்றும் போலவே
எங்கள் மண்ணில்
இயல்பான நிகழ்வுகள்
இன்றும் நடந்தன.
காதல் சுமந்த உன்
கடித வரவு தவிர.

இரவு போனது
பலபல வென்று
பொழுது விடிய
முகாம் விஸ்தரிப்பின்
முன்னறிவிப்பாய்
துயிலெழுப்பின
துப்பாக்கிச் சத்தங்கள்.

போன கிழமை
'குமண' கப்பல்
வந்து போனதில்
உனது கடிதம்
எனக்குக் கிடைத்தது.

ஆச்சரியப்படாதே!
உயிர் வாழ்விற்காய்
உணவு சுமப்பதை,
பிரயாண வசதிக்காய்
பயணிகள் ஏற்றலை
இப்போதைக்கு
கப்பல்கள் எல்லாம்
ஒத்தி வைத்துள்ளன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கவச வாகனங்கள்
கனரக ஆயுதங்கள்
இப்படியே ஒப்பனைக்காய்
இடையிடையே
வெளியூர்க் கடிதங்கள்
அவ்வளவு தான்.
எங்கள் நாட்டில்
எல்லாமே மாறிவிட்டன
உன்னைப் போலவே.

நண்பனே
எங்கள்
இருவரின் வாழ்விலா
எம்
இதயங்கள் இணைந்தன
இல்லையே.

உன்
படைப்பாக்கங்கள் எல்லாம்
தேசத்தை அதிகமாய்
நேசித்ததால் தானே
நானும் நீயும்
நேசிப்புக்குள்ளானோம்.

எப்படி மறந்தாய்?
அறுகம் புல்லு
அடர்த்தியாய் வளர்ந்த
வயல் வரம்புகளில்
வானம் சிவந்த பொழுதுகளில்
பரபரப்பான செய்திகள் பற்றி
பேசுகையில்
தூரத்தில் தெரியும்
கவச வாகனத்திற்காய்
மெதுவாய் நாங்கள்
எழுந்து நடந்ததை,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கீரிமலைக் கடற்கரையில்
கடற்காற்றின் இதழ்தடவ
கால் புதையக் கால் புதைய
கைகோர்த்து நடந்தபடி
எங்கள் தேசத்தில்
எங்கள் வாழ்வு
எப்படி அமைதல்
சாத்தியம் என்று
பாதைகள் வகுத்ததை,
எப்படி மறப்பாய்?

லண்டன் மாநகரின்
பனி படர்ந்த தெருக்களிலே
பைன் மரத்து நிழல்களிலே
தனியே இருந்தபடியே
காலம் கடப்பதாய்
கடிதம் எழுதினாய்.

மன்னித்துக்கொள் நண்பனே
உன் இதயத்தில்
தேடிப் பார்
தேசத்தைப் பற்றிய
ஏதேனும்
சின்ன ஞாபகங்கள்
இருக்கிறதா என்று,
இருந்தால்
உன்னை
என் தேசம் அழைக்கிறது.
இல்லாவிட்டால்
என் நினைப்புகளை
அழித்து விடு.
பார்சலில் வருகின்ற
பாவையரோடு
உன்
பயணத்தைத் தொடர்ந்து செல்.

என் நாட்டின்
வரலாறு
என்னைப் பதிவு செய்யும். ★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வரலாற்றின் புத்திரிகள்

மாற்றம்.
இந்த மகவுக்கு
நாங்கள்
மகுடம் சூட்டிக் கொள்கிறோம்.

மணக் கோலத்தையே
மனப்பாடம் செய்த
பெண் குலத்தின்
பெரு விழிகள்
இன்று
விடுதலைக்கு
விலையாகும் வீரர்களாய்
மாவீரர் மயானத்தை
மகிழ்வுடனே பார்க்கின்றன.

பூவும் பொட்டும்
பொன்தாலி மட்டும்
போதுமென்ற தென்றல்கள்
இன்று
புயல்களாய் மாறி
புது யுகம் காண
புறப்பட்டு விட்டன.

இன்று தெரிவதெல்லாம்
புன்னகைப் பதுமைகளின்
புதிய
மாதிரி வடிவங்களல்ல.
அடக்குமுறை ஆதிக்கத்தை
அழிப்பதற்கு
ஆணை பிறப்பிக்கும்
அன்பு முகங்கள்.

கச்சேரி வைத்து
கல்யாண ஊர்வலம்
நடாத்திய
காலம் போய்
களத்தினிலே
கருவியை அணைத்தபடி
கருகிய தோழியின்
இறுதி ஊர்வலம்
இதோ வருகிறது.

அன்று
கைப்பிடித்தவனின்
கடைசிப் பயணத்துக்கு
வாசல்வரை வந்து
விசும்பல்களை மட்டுமே
விடையாக்கினோம்.

இன்று உடலைச் சுமந்த
ஊர்தியின் பின்னே
உறுதியை மட்டுமே
உயிரினுள் செலுத்தி
அணிவகுப்புகளுக்கு மத்தியில்
அதே சீருடையுடன்
மூட்டும்
சிதை நெருப்பின் ஆணையாக
பயணம் தொடரும்
பிரகடனம்.

குடும்ப வாழ்வு
என்ற
குறுகிய
வரையறுப்பு எல்லைகளுக்கப்பால்
வாழ்ந்து காட்டிய
வரலாற்றின் புத்திரிகள்
இங்கேதான் [illegible]கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

இதனால்
இன்னமும்
சேலை கட்டிச் சிங்காரித்து
கூந்தலுக்கு மாலை
கட்டுவதை மட்டுமே
சிந்தித்திருப்போரின்
சிந்தனைக்கு
இதோ ஒரு
சின்னப் பொறி,

உங்கள் சிந்தனைகளைச்
சீர்ப்படுத்துங்கள்,
சீருடைகளுக்கு ஏற்றதாக.
ஏனெனில்
உயிரிருப்பை
உறுதிப்படுத்தக் கூட
உரிமைப் போர்
நடத்த வேண்டிய
உலகமிது.

★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# சிதறிப் போன சிவப்பு வல்லரசு

ஓ!
சோவியத் யூனியனே
உனது பெயரும்
உருக்குலைக்கப்பட்டதாமே!
ஆனாலும் நான்
சொந்தம் கொண்டாடுவதெல்லாம்
அந்த சோவியத்துடன் தான்.

ஏனென்றால்
உலக வல்லூறுகளில்
நீ ஒரு
வானம் பாடியாய்
என்னுள்
உயர்ந்தவன் அல்ல.

ஆனாலும்
மனித வாழ்வின்
மறுமலர்ச்சியில்
உன் தேசம்
ஒருபடி
உயர்ந்தது என்பது
என்னவோ உண்மைதான்.
அதனால் தான்,
நான்
சொந்தங்கொண்டாட
விரும்புவதெல்லாம்
அந்த
சோவியத்துடன் தான்.

ஐ. நா சபையில்
நேற்று
இரவோடு இரவாக

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

உன் கொடியும்
இறக்கப்பட்டதாமே?

உன்
பெரிய தேசம்
விடுவிக்கப்பட்ட போது
வீழ்ந்த வீரர்
சிந்திய இரத்தத்தால்
சிவந்த கொடியல்லவா அது,
இதனால் தான்
உன் கொடி
இறக்கப்பட்ட போது
என் நெஞ்சினுள்ளும் ஏதோ...

சோஷலிஸம் என்பது
உலகம் முழுவதிலும்
உள் வாங்கப்பட வேண்டும்
என்பதற்காய்
அண்டை நாடுகளிலெல்லாம்
பண்டப் பொருளாக்கி
அவசரப்பட்டு அதனை நீ
இறக்குமதி செய்த போது
என்
இதயம் வருந்தியதுண்டு.

ஆப்கானிஸ்தானில்
அணிவகுத்த உன்
டாங்கிகளுக்குள்
சிலந்திப்பூச்சிகள் போல்
சிக்குண்ட
அப்பாவி உயிர்களின்
ஆன்மாவின் ஓலம்
என்னை
அலைக்கழித்ததுண்டு.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எரித்திரிய மக்களுக்கு
உதவிக்கரம் நீட்டி
உறுதுணையாய் நின்ற நீ
உறுமீன் கிடைத்தவுடன்
உதவிக் கரத்தையல்ல
அதன்
உள்ளங்கையையும்
சேர்த்தறுத்த
உன்
சிறுமைத்தனம்
இன்னமும் என் நினைவில்...

ஆனாலும்
உன் தேசத்தில்
மனித வாழ்வின்
அடிப்படைத் தேவைகள்
அனைவர்க்கும் கிடைக்கிறது.
என்ற
ஒன்றே ஒன்றுக்காய்
உன்னை
ஆயிரம் தடவை
நான் ஆராதித்ததுண்டு
இந்த மகிழ்ச்சியில்தான்
உன் அற்பத்தனங்களெல்லாம்
என்னுள்
அள்ளுப்பட்டுச் சென்றன.

உன் மக்களின்
சுதந்திர வாழ்வுக்காய்
அன்று - நீ
நடாத்திய புரட்சிதான்
இந்த சிறுமைத்தனங்களுள்ளும்
உன்னோடு
என்னைப் பேச வைக்கின்றன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நண்பனே!
அன்று வருந்திய
என் இதயம்
இன்றும் வருந்துகிறது.

சுருக்கிடப்பட்ட
லெனினின் சிலையும்
அகற்றப்பட்ட
அவரது உடலும்
மறைக்கப்பட்ட
மாவீரர் கல்லறையும்
எரிக்கப்பட்ட
புத்தகக் குவியல்களும்
அழிந்து போகக் கூடியவை
அல்லவே.

எங்கெங்கு
மானுடம் மறுதலிக்கப் படுகிறதோ
அங்கெல்லாம்
அவை
மறுவாழ்வின்
உயிர்க் கருவாய்
உணர்வு பெற்று
எழுந்து வரும்.

உலகம் முழுவதிலும்
புதிய வரலாறு
பிறப்பெடுக்கும்
அப்போது
இன்று
சிதைந்து போயிருக்கும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உன் தேசம்
புதிதாய்
சிருஷ்டிக்கப்படும்,

இறுகவே பற்றி
உயர்த்தப்பட்ட
எம்
நட்புரிமைக் கரங்களுக்குள்
உலக மானுடர் தம்
மகிழ்ச்சிக் குரல்கள்
எம் செவிப்பறையை
எட்டி உதைக்கும்.

★

[சோவியத் கலைக்கப்பட்டதாக
அறிந்த அன்று]

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# ஐ. நா. சபையே....

ஐ. நா. சபையின்
அடுக்குமாடி
உறுதியாக
உயர்ந்து நிற்கிறது.

மனித எலும்புகளின்
மகத்தான உறுதியினால்
வானைப் பிடிக்க
வளர்ந்து வருகின்றது.

பட்டொளி வீசி
பறக்கின்ற கொடியினை
எட்டிப் பாருங்கள்
தொகை வகையாய்
சேர்ந்த உயிர்கள்
ஆடித்துடிக்கின்றன.

மேடைமீது
ஏறி இருந்து
ஏற்றம் பற்றி
பேச்சு நடாத்தும்
தேசத்துரைமாரே
குனிந்துபாருங்கள்
பூவாய் இருக்கும்
கம்பளம் கீழே
புழுவாய் நெளியும்
மனித உடல்க்ள்
அவை உங்கள்
குருட்டுக் கண்களை
வெருட்டித் திறக்கும்.

கோழியின் செட்டைக்குள்
குஞ்சுகள் தான்
பாதுகாக்கப்படும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆனால் இங்கோ
பருந்துகள் தானே
பாதுகாக்கப்படுகின்றன.

ஐ. நா. சபையே
உன்
ஏமாளித்தனத்தை
என்னென்று சொல்ல
கோடி கோடியாய்
ஏழை உயிர்களை
ஏப்பம் விட்ட
வல்லூறுகளின் வண்டி
ஊதிப் பெருத்து
உள்ளுக்குள் அடங்காது
செட்டைக்குள்ளே
சின்னதாய்த் தெரியுது.

'உலக சமாதானம்'
இந்த
உன்னத கோட்பாட்டிற்குள்
தலையைப் புதைக்கும்
தீக்கோழி நீ

முகம் தெரியாவிட்டாலும்
சீ...
முழு உடலும்
அம்மணமாய்த் தெரிகிறது.

உரிமைப்போர் எல்லாம்
உன்னால்
உறுதிப்படுத்தப்பட வேண்டுமாம்
உலகம் சொல்கிறது.

சுதந்திரத்தின் சுகம்பற்றி
சொல்வதற்கு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சொந்தமாய் உனக்கேதும்
அனுபவம் உண்டா?
இல்லையே.

எங்கள் தேசம்
எங்கள் மக்கள்
எமதே உரிமை
எனவே நாமே
சுதந்திரப் பிரகடனம்
செய்து முடித்திடுவோம்.

நாளை
தியாகமும் திறமையும்
திடமாய் எமைவளர்க்கும்.
அப்போது
சமநிலையைச் சரிப்படுத்த
எம்மை நீ
சந்திக்க வேண்டி வரும்.
அக்கணத்தில்
சுதந்திரம் பற்றிய
சொந்த அனுபவத்தை
நாங்கள் சொல்லித்தருவோம். ★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வெறுமை

அவர்கள்
மனித வல்லரசுகளின்
பரிசோதனைக் களங்கள்.
அப்போது
வளர்முக நாடுகளின்
அப்பாவி உயிர்களாய்
அவர்களின்
மனித உணர்வுக்கள்
மரணித்து விழும்
ஆய்வின் முடிவுகளாய்
பரிணாம வளர்ச்சி
பின்நோக்கிப் பாயும்
மீண்டும்
விலங்குணர்வு
அவர்களுள்
விழித்துக்கொள்ளும்.
அன்றேல்
உணர்வு உதிரங்கள்
உலர்ந்த உடல்களாய்
அவர்கள்
நடந்து திரிவார்கள்.
அப்போது
சுதந்திரம் என்ற
சொல் கேட்டால்
ஒருதுளி இரத்தம்
உணர்வின் பெயரால்
அவர்களுள் ஊறும்
மறுபடி........
மறுபடி என்ன
மீண்டும்
மனித வல்லரசுகளின்
பரிசோதனைக் களங்களாய்
உலர்ந்த உடல்களாய்
அவர்கள்
நடந்து திரிவார்கள். ★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# மண்ணினை மறந்த மைந்தர்களே...

மண்ணினை மறந்த
மைந்தர்களே!

நீங்கள்
அந்நிய தேசத்தில்
அகதி அந்தஸ்து
அணைத்தெடுத்த
ஆரோக்கியக் குழந்தைகளாம்.

விசாலமான தேசங்களில்
நீங்கள் வீற்றிருப்பதால்
நேற்று வரை
சோறு போட்ட
சொந்த மண்ணை
சிந்தித்துப் பார்க்க
நேரமில்லாதவர்கள்.

உங்களுக்கு
வாடகைக் காற்றே
வசதியாகப் பட்டதனால்
சுதந்திரக் காற்றைச்
சுவாசிக்க முடியவில்லை,

உங்கள்
இதயத்தின் துடிப்பெல்லாம்
இரவல் காரையும்
இயந்திர வாழ்வையும்
பற்றியதுதான்.
இலட்சிய வாழ்வை
பற்றியதல்லவே.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உங்கள் பார்வையில்
விடியல் என்பதெல்லாம்
கண்ணைப் பறிக்கும்
வெறும் விளக்கு
வெளிச்சங்கள் தான்.
நாங்கள்
காணத் துடிப்பதெல்லாம்
கிழக்கு வானத்தின்
சிவப்பு விடியல்கள்.

சொந்தத்தை மறந்த
சோதரரே!
குண்டு வெடிப்புகளின்
குறுக்கதிர்வுகளினால்
குலைக்கப்பட்டிருக்கும்
எம் தேசம்
ஒரு நாள்
குலுங்கிச் சிரிக்கும்.

குருதித் தடாகத்தில்
குறையுடல்கள்
மிதந்து கவிந்தாலும்
எங்கள்
சத்தியப் போர்
சரித்திரத்தில்
வெற்றி பெறும்.

எங்கள் நாட்டின்
விறகுக் கட்டைக்கும்
விடுதலையின்
விலை தெரியும்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பூமியைப் பிரித்து
புதிதாய் பிறக்கும்
புல்லுக்குக்கூட
புரட்சியின்
புதுமை விளங்கும்.

உதிர்ந்து விழும்
சருகுகளும்
உரிமைப் போரின்
உறுதி உணரும்

என்னருமைச் சோதரரே
நகரத்து நெரிசலில்
நசிந்து போகாது
நிமிர்ந்து கொள்ளும்
நேரங்களில்,

உங்கள்
நெஞ்சினைக் கேளுங்கள்
எங்கள் தேசத்தின்
கிடுகு வேலியையும்
கிராமத்து வாசனையையும்
நாம்
இழப்போமா என்று.

இன்று அங்கே
குடியுரிமை கிடைத்து விட்டதால்
குடியிருப்பையே
உறுதிப் படுத்தி விட்டீர்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கவனம்
நாளை
உயிரிருப்புக்கே
உலை வைத்து விடுவார்கள்.

என்றோ ஒருநாள்
உங்கள்
குழந்தைகளின் குழந்தைகள்
குரல் வளைகள் நெரிக்கப்படும்.
அப்போது
வரலாற்றைப் படைத்து நிற்கும்
என் தேசத்துக்கு
வந்தாரை வரவேற்கும்
தேவை அவசியம் தானா?

★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# புதிய தலைமுறை

மாணவர்கள்தான் நாம்.
ஆனாலும்
மானுட வாழ்வின்
மகத்துவம்
மறுக்கப்பட்டவர்கள்.

தேசத்தின் தெருக்களில்
தெரியும் நிகழ்வுகளால்
தினம் தினம்
நாங்கள்
சிதைந்து போகிறோம்.

சத்தியமாய் சொல்கிறோம்
நிம்மதியாய் மூச்சு விட
துண்டு நிலம் கூட
எமக்கில்லை.

உறவின் பிரிவொன்றில்
சடலத்தை வைத்து
சடங்குகள் முடித்து
சாம்பல் அள்ளும்
சந்தர்ப்பம் எமக்கில்லை.
சந்திரனைப் பற்றிய
சந்தேகம் எமக்கெதற்கு?

எமக்கு மேலே
எரிகுண்டு வீசும்
எதிரியின் விமானம்.
பதுங்கு குழியை விட்டு
எழுந்து வர

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எமக்கு முடியாது.
எக்ஸ் சக வை
எதைக் குறிக்கின்றது
என்பது எமக்கெதற்கு?

குடும்பமாய் கூடியிருந்து
குறை நிறைகள் பேசி
வீட்டு நிலைமை
விளங்கப்படுத்த முடியாதவர்கள்.
விண் வெளியின் விலாசம்
எமக்கெதற்கு?

யுத்த விமானங்களின்
சத்தங்களின் பின்னால்
நியூட்டனின் விதி
சரியா பிழையா என
பரிசோதிக்கும்
பைத்தியக்காரரா நாங்கள்?

சாவு எம்மைச்
சந்திக்கும் போதும்
சான்றிதழ்களைக்
கைப்பிடிக்கும்
மனநோயாளரா நாங்கள்?

இல்லை.
முதலில்
மனிதராய் வாழ
முயற்சிகள் செய்வோம்.
முடியாவிட்டால்
புரட்சிகள் செய்வோம்.

தேசப்படத்தில்
எங்கள் தேசத்தை
தேடிப் பார்ப்போம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இல்லாவிட்டால்
குருதி மையினால்
குறித்துக் காட்டுவோம்.

அடிப்படை வசதிகள்
அனைவருக்கும் கிடைக்கும்
சமத்துவப் பூமியை
நாங்கள்
சமைப்போம்.

பின்னால்
நாங்கள்
காற்றினைக் கூட
எங்கள்
போக்கு வரத்துக்கு
ஏற்றதாக்குவோம்.

விண்ணினைப் பிளந்து
வீடுகள் கட்டுவோம்.

சந்திரனைக் கொண்டு வந்து
சரி பிழை பார்ப்போம்.

அதுவரை எங்கள்
புஜங்களிலெல்லாம்
புரட்சி குடியிருக்கட்டும். ★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கற்றுக்கொள்

ஏய் குழந்தாய்?
ஏன் அழுகிறாய்
உன்
சின்ன விழிகளுக்குள்
சோகத்தை
சிறைப்பிடித்து வைத்திருக்கிறாயா?

ஏன்?
முரசினைப் பிரித்து
முளைத்த முத்துக்கள்
வெளியே தெரியாது
இறுகப் பூட்டிய
உன்
இதழ்களுக்கூடாய்
துயரத்தை எப்படி
தொண்டைக்குள் திணித்தார்கள்.

உன்
பட்டுக் கன்னங்களில்
ஒட்டிக் கொண்டிருக்கும்
கண்ணீர்ப் பொருக்குகளுக்கு
காரணம் என்ன?
விளங்குகிறது.
'மனிதர்கள் வாழும்
இந்த மண்ணில்
உணர்வினைச் சொல்ல
உரிமை இல்லை' என்கிறாயா?

பொய்யும் புரட்டும்
பொறாமையும் சேர்ந்து

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எரிகின்ற தழலுள்
நீ வெந்து போனாய்.
அப்படித்தானே?

விம்மலும் அழுகையும்
இதற்கு விடைதரா.

ஏனென்றால்
இந்த யுகத்தில்
'பொய்யை மெய்யெனக் கொள்க
வாழ்வின் அத்திவாரமாய்
பொறாமையை எடுக்க'
என்பன
வாழ்க்கை பற்றிய
விஞ்ஞான விதிகளின்
எடுகோள்களாகலாம்.

எனவே கற்களும் முட்களும்
குத்திய கால்கள்
கடுமையை மட்டுமே
உணர்ந்து கொள்ளட்டும்.

இறுக மூடிய
உன் இதழ்கள் போலவே
இதயம் இறுகட்டும்.

★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# சிசுக்கொலை

குற்றப் புண்கள்
சுமந்த மேனியில்
குருதியும் சீழும்
சேர்ந்து வடிந்ததில்
சமூக இதயம்
நாற்றமெடுத்தது.

தப்பினைத் தனியே
சுமந்த தாய்மை
தொப்பூழ்க் கொடியின்
தொடர்பற முன்னரே
தொண்டையை நெரித்ததில்
துவண்டு போனது.

உதிரம் கொடுத்து
உயிரை வளர்க்கும்
இயற்கை நியதியை
சாட்சியாய் வைத்து
தாய்க்கு மட்டும்
தண்டனை வழங்கும்
நாற்றமெடுத்த
சமூக நீதியின்
நாடித்துடிப்பு
அடங்கிப்போகட்டும்.

மண்ணில் விழமுன்னே
தொண்டைக்குள் மரணம்
திணிபட்டுப்போன
பிஞ்சுக் குழந்தைகளின்
நெரிபட்ட குரல் ஓசை
உலக ஆன்மாவை
உசுப்பி எழுப்பட்டும்.

★

# விடுதலைப் பூ விரிகின்றது

என்னை
என் பெற்றோரை
பெற்றோரின் பெற்றோரை
இப்படியே
இந்தச் சந்ததியை
பிரசவித்த
அன்னை தேசமே!

பொல்லுப் பிடித்தபடி
பொடி நடையாய் ஓடிவரும்
பிரியமுள்ள பாட்டியே!

சொந்த மகனாய்
சோதரனாய்
பந்த பாசங்களை
பலப்படுத்திய நெஞ்சங்களே!

புலிமாமா
போகின்ற பாதையைப்
பார்த்து வரும்
சின்ன மருமக்களே!

நேற்று நாங்கள்
அன்னை பூமியின்
அவலக் குரலும்
குண்டுவெடிப்புகளும்
யுத்த விமானங்களும்
சத்தமாய் வரவேற்க
இத்தெருவால்
அவசரமாய் ஓடினோம்.
இன்று
குத்து விளக்குகளும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கூப்பிய கரங்களும்
அமைதியாய் வரவேற்க
ஆறுதலாய் வருகிறோம்.

விடுதலை உணர்வினை
வீதியால் சுமந்தபடி
ஊர்வலமாய்
ஆலயத்துக்கு வருகிறது
அங் கரிக்கப்பட்ட தேர்.

அடியழிப்பும் பிரதட்டையும்
எங்கள்
அருகினில் வேண்டாம்
வடத்தினைப் பிடித்து
ஒன்றாக இழுங்கள்
ஒற்றுமையாய் போவோம்.

எத்தனை மாலைகள்
எவ்வளவு மலர்கள்
இந்த
மலர்ப்படுக்கையில்
நாங்கள்
மௌனித்து விட்டோமோ?
இல்லை.
மகிழ்வாகத் தூங்குகிறோம்.
உற்றுப் பாருங்கள்
எங்கள் உதடுகளை,
நெளிகின்ற அவற்றுள்
புன்னகைகள்
புலப்படுகிறதல்லவா?

இதோ!
எங்கள்
ஆராதனை இடத்திலிருந்து
அற்புதமான வாசனை
ஓ!
விடுதலைப் பூ விரிகின்றது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

விடுதலை விதைகள்
வீழ்ந்து போயிருக்கின்ற
எங்கள்
நந்தவனத்திற்கு
வந்து பாருங்கள்.
அந்த
தோப்புக்குள்ளிருந்து
உங்கள்
குயில்களின்
குரல்கள் கேட்கும்

வாருங்கள்.
இந்த
புண்ணிய பூமிக்கு
புறப்பட்டு வாருங்கள்.
உங்கள்
புஷ்பங்கள்
அயர்ந்து தூங்கும்
மலர்ப்படுக்கைகளைப் பாருங்கள்.
எழுகின்ற சுடர்கள்
சமாரம் வீச
நாங்கள்
சாய்ந்து தூங்குவோம்.

இதென்ன
ஆழ்ந்த தூக்கத்தில்
அழுகைச் சத்தங்கள்.
வேண்டாம்
உயிரினும் இனிய
எம் சொந்தங்களே
நிமிர்ந்து பாருங்கள்
எட்ட நின்றல்ல
கிட்ட வந்து பாருங்கள்.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

எங்கள்
உயிராக உணர்வாக
இதோ
எங்கள் துப்பாக்கிகள்
எழுந்து நிற்கின்றன.
பிடியுங்கள்.
சரிந்து விழ முன்
பிடியுங்கள்.
எமதருமைச் சோதரரே
இதுதானே எம்முயிர்
உடனேயே பிடியுங்கள்.

ஆதிக்கக் கரங்கள்
எம் அன்னையை
அமுக்குகின்றன.
அணிவகுங்கள்.
குரல்வளைகள் நெரிக்கப்பட்டு
குற்றுயிராய்க் கிடக்கும்
எம் அன்னையைத்
தப்பித்துக் கொண்டாருங்கள்
ம் தப்பித்துக் கொண்டாருங்கள். ★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கிழக்கு நோக்கி

உலகத்தின் உயரம்
இமயத்தைக் காணவில்லை.
இறங்கிப் போய் விட்டதா?
இல்லை.
சுதந்திரப் பூவிற்கு
சுவாசம் அளிக்க
உயிர்க் காற்றை
ஊதிய
உங்கள் தியாகத்துள்
இமயம்
இல்லாமல் போய் விட்டது.

சில காலம்
சூரியனைக் கூட
ஓய்வெடுத்துக் கொள்
என்பது போல
பூமி எங்கும்
புதிதாய்
ஒரு வெளிச்சம்.
ஆம்!
உப்புக் காட்டினை மீட்கும்
துப்பாக்கி உறவில்
உயிரைத் தொலைத்த
உடலங்கள்
ஒன்றாய் எரியும்
ஒப்பற்ற வெளிச்சம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எல்லைக் கோடுகளினால்
ஏழாய்ப் போன
அத்தனை கண்டங்களும்
ஒன்றாய்
அதிர்கின்ற ஆச்சரியம்
அது
கடைசி மரியாதைக்கு கூட
எம்மால்
கண்டெடுக்க முடியாமல் போன
உங்கள்
இதயங்களின்
இலட்சியத் துடிப்புக்கள்.

நட்சத்திரங்களை யெல்லாம்
இப்போது
நாங்கள்
நிமிர்ந்து பார்ப்பதில்லை.
ஆயிரமாயிரமாய்
அவற்றுள்
நீங்கள்
புகுந்து கொள்வதால்
புறப்படும் ஒளிக்கற்றைகளை
ஒன்றாக சந்திக்க
எம் விழிகள்
ஒத்துழைப்பதில்லை.

அகராதிகள் எல்லாம்
அண்டை நாடுகளில்
அடைக்கலம் தேடி
அலைகின்றன
அர்த்தங்கள் தேடி
உங்கள்
அவயவங்கள் துரத்துவதால்.

Tamileelam Archive

சாவின் கூரையில் நின்று
சவால் விடும்
உங்கள்
சரித்திரத்தை விபரிக்க
வார்த்தைகளுக்கு
வறுமைப்படுகின்றோம் என்று
மொழிகள்
மொட்டாக்கிடுகின்றன.

மௌனத்தை
மொழியாக்கிய மாவீரரே
எட்டுத் திசைகளிலும்
பட்டுத் தெறித்த
எம்
அன்னையரின் அழுகுரல்கள்
ஆவேசத்துடன்
ஆயுத ஆலைகளுக்கு
அணிவகுக்கின்றன.

ஆம்!
எங்கள் தேசத்தில்
பூக்களும்
புத்துணர்ச்சி பெற்றுவிட்டன.
எரிகின்ற நெருப்பினிலும்
அவை
எழுந்து வருகின்றன.

இதோ
சுதந்திரச் சுடரைக்
கருத்தரித்து
ஊட்டச் சத்தாய்
உங்களை வாங்கி
விடுதலைக் குழந்தையை
வயிற்றினுள் சுமந்து
உங்கள்
கல்லறைகள்
அதன் பிரசவிப்பிற்காய்
கிழக்கு நோக்கி
மெதுவாய் நகர்கின்றன.

★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கல்லறைக்குள் ஒரு கருவறை

கவிதைகளைச் சுமந்த
கருவறையை
இன்று
கல்லறை ஒன்று
சுமக்கிறது.

ஆம்!
கஸ்தூரி
கவிதைகளின் நாயகியே
இதோ உன்
கல்லறையைச் சுற்றி
ஒரு
கவிமாலை.

விறைத்து விட்ட
உன் உடல்
வீரமரணத்தை
உறுதிப்படுத்தினாலும்
உண்மை என்று
ஏற்றுக் கொள்ள
உள்ளம் மறுக்கிறது.

ஆயிரத்தில் ஒருவராக
அஞ்சலிக்காய்
அத்தனை வீரர்களுள்
நீயும்....
எல்லோரும்
பலர்ப்படுக்கையில்
மௌனமாக...

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆனால்
உன் காலடியிலோ
கவிதைகள் எல்லாம்
கரைந்து போயிருந்தன.

சிறுகதைகள் எல்லாம்
உன்னை
சிரிக்க வைக்கும் முயற்சியில்.

நாடகங்கள் எல்லாம்
உன் மரணமும்
நாடகமாகாதா என்ற
நப்பாசையில்.

நீ
ஆசை வைத்துப் பார்க்கின்ற
இந்த
அழகான தேசத்துக்கு
உன்னால் தேடப்பட்ட
சொத்துக்கள் இவைதான்.

உன்னை
இனம் காணத் தவறிய
இலக்கிய உலகத்தின்
இதயத்துக்கு
இப்போதாவது தெரிந்திருக்கும்
நீ இமயமென்று.

துப்பாக்கி மட்டுமே
தூக்கத் தெரிந்தவர்கள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

என்ற தப்பான
வெற்றுக் கோள்களுக்கு
நீ வெடிகுண்டு.

தமிழீழத்தில் நீ
தடுத்து வைக்கப்பட வேண்டியவள்
ஆனால்
விடுதலையின் வீச்சு
உன்னையும்
விலையாக்கிக் கொண்டது.

கணப்பொழுதொன்று
காலமெல்லாம்
கவலைப்படப் போகின்றது.
தான்
காவல் செய்தபோது
கண்ணயர்ந்ததுதான்
நீ
காணாமல் போனதற்கு
காரணம் என்று.

உன்
உயிரற்ற உடலை
அடையாளம் கண்ட
உயிரினங்கள் எல்லாம்
அப்படி அப்படியே
அசைவற்றுப் போயின,
உன்
அன்பை இழந்த
ஆறாத சோகத்தில்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இந்த
கவிதா மாலையை
சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில்
எழுகின்ற
உராய்வுச் சத்தம்கூட
உன்னை
உசுப்பி விடக்கூடாது.

ஏனென்றால்
புதுக்கவிதைகள்
போர்முனைக்குப்
புறப்பட்டு விட்டன.

சிறுகதைகள்
அதிரடித்தாக்குதலுக்கு
அணிவகுத்து விட்டன.

நாடகங்கள்
வெற்றிக் கொடியோடு
வீதி உலா வரப்போகின்றன.

காலம்
விடுதலையைக்
கட்டி இழுத்து வரப்போகிறது.

அப்போது
எனதருமைத் தேசத்தில்
விடுதலையை வரவேற்கும்
பூபாளம் பாட

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கட்டாயம்
நீ வேண்டும்
கஸ்தூரி.

அதுவரைக்கும்
அமைதியாக
உன் கல்லறை
கவிதைப் படையெடுப்பை
நடாத்தட்டும்.

★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அன்பான அம்மா

அன்பான அம்மா!
என் தேசத்தில்
ஒரு வைகறையை
வரவேற்பதற்காக
வரலாற்றுக் கடமை
அழைப்பு விடுத்ததை
அடுத்து
காணாமல் போன
உன் அன்பு மகளின்
உள்ளத்து உணர்வுகள்
இங்கே...

சின்ன வயதில்
அயல் வீட்டுச் சிறுமியுடன்
விளையாட
உன் அனுமதியைப்
பெற்றுச் சென்றதும்,
நீண்ட தெருக்களில்
தென்னைமர நிழல்களில்
முட்கிளுவை வேலிகளுக்கு
இடையில் நின்று
இ. போ. ச. பஸ்ஸை மறித்ததும்,
சூரியன் மறைவதை
சற்றேனும் சிந்திக்காது
அந்திக் கருக்கலிலும்
வீடு வரா என்னைத் தேடி
அப்பாவுக்குத் தெரியாது
அழைத்துச் சென்றதையும்
இன்னமும்
நான் மறக்கவில்லை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அம்மா!
இன்னும்... ..
அதிகாலைப் பொழுதில்
உண்ணவும் நேரமில்லாத
என் இயந்திர வாழ்வில்
நீ உணவு தீத்தியதையும்
சுடுகாட்டின்
அருகாமைப் பாதையை
நினைத்துப் பயப்பிடும்
உன் இயல்பான சுபாவத்திலும்
படிக்க வைக்க வேண்டும்
என்பதற்காய்
மண்ணெய் விளக்கின் ஒளியை
காற்று மறைக்கவும்
எத்தனை இரவுகள்
மழையில் நனைந்தும்
இரவில் என்னை
கூட்டி வந்த
உன் மெலிந்த உருவத்தை
எப்படி நான் மறக்க?

இன்று
நான் வரவில்லையென
நீ அழுது கொள்வதாக
நான் கேள்விப்படுகிறேன்.

அன்பான அம்மாவே!
நான் உன்னை
அளவு கடந்து நேசிக்கிறேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அதனிலும் பார்க்க
நான் ஓடி விளையாடிய
என் வீட்டு முற்றத்தை,
நான் கால் பதித்த
ஒற்றையடிப் பாதைகளை,
செம்பாட்டு மண்படிந்த
என் தெருக்களை,
சணல் பூத்துக் குலுங்கும்
என் தேசத்தை,
தோட்ட வெளிகளை
இப்படி இப்படி......
எத்தனையோ.

மொத்தத்தில்
என் தேசத்தை
எனதருமை மக்களை
நான் மானசீகமாக
நேசிக்கிறேன்.
இதனால்
அடிமை இருளால் மூடப்பட்ட
என் தேசத்தில்
வைகறையை வரவேற்க
தம்பி தங்கைகளுடன்
நான் செல்கிறேன்.

நாளை திரும்பி வரா
உன் மகளை எண்ணி
நீ கவலைப்படாதே.
என் மறைவின் பின்னர்
புதிய தோழர்கள்
அந்த வைகறைக்காய்
புறப்படுவார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அதற்கு முன்னால்
அவர்கள்
உன்னிடம் வரலாம்.
அப்போது அவர்களின்
புதிய சீருடையில்
புதிய துப்பாக்கியில்
இனிய முகங்களில்
என்னைப் பார்.

அடுத்து வரும் நாட்களில்
அவர்களும்
இல்லாமல் போகலாம்.
ஆனால்......
என்றோ ஒருநாள்
எம் மக்கள் புறப்படுவார்கள்.
அப்போது அந்த
புதிய விடியலை
வரவேற்கும்
அதிகாலைப் புஷ்பங்களாய்
மெல்லிய பனித்துளியின்
முகத்தின் பின்னால்
நாம் முகையவிழ்ந்து
தென்றலின் தடவலில்
முகமலர்ந்தாடுவோம்.
அப்போது நீ இருந்தால்
உற்றுப் பார்.
உன் செல்ல மகளின் முகம்
சிரித்தபடியே தெரியும். ★

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# கப்டன் அக்கினோ

போராட்டம் ........

இந்தச் சொல்லுக்குள்தான் எத்தனை விதமான உணர்ச்சி அலைகள் அடங்கியிருக்கின்றன.

குடும்பம் என்ற சிறிய பரப்புக்குள் சில மனிதர்கள், சில உணர்வுகள் என்று வாழ்ந்த நாம், 'விடுதலை இயக்கம்' என்ற விரிந்த பரப்புக்குள் வந்ததால், எத்தனை விதமான உள்ளங்களை, சந்தோஷங்களை, பிரிவுத் துயரங்களை, வாழ்வின் உண்மைகளைக் கண்டு கொண்டிருக்கிறோம்.

எமது போராட்ட வாழ்வில் உன்னதமான உள்ளங்களோடு பழகும்போது சந்தோஷப்படும் நாங்கள், பிரிவு என்று வருகின்றபோது அதிகமாகத் தாக்கப்படுவதென்னவோ உண்மைதான். கப்டன் அக்கினோவின் உள்ளங்கூட அந்த உன்னதமான உள்ளங்களில் ஒன்றுதான்.

மிகவும் வசதியான குடும்பம். வாழ்வில் பொருளாதாரக் கஷ்டங்களையோ, துன்பங்களையோ கண்டிராத செல்வந்தமான குடும்பச் சூழலின் கடைசிப்பிள்ளைதான் அக்கினோ.

''நாங்கள் செல்லமாக வளர்ந்தனாங்கள். போராட்டக் கஷ்டங்களை எங்களால தாங்க ஏலாது'' என்று சொல்கின்றவர்களுக்கு அக்கினோ வாழ்ந்து காட்டியிருக்கிறான். விடுதலை உணர்வுக்கு முன்னால் வேறெந்தப் புற உலக உணர்வுகளும் தாக்குப்பிடிக்க முடியாது என நிரூபித்திருக்கின்றான் ஏனென்றால் ....?

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

அக்கினோவும் செல்லப்பிள்ளைதான். பாடசாலை நாட்களில் அக்கினோவைக் கண்டவர்கள், பழகியவர்கள் அக்கினோவைப் பற்றிக் கூறும் தகவல்கள்,

"இவள் எப்படி இந்த வாழ்வை ஏற்றுக் கொண்டாள்?'' என ஆச்சரியப்பட வைக்கும்.

அக்கினோவின் எடுப்பான தோற்றம் அவளைப் பற்றிய பார்வையில் ஒரு தவறான கணிப்பைக் கொடுத்திருக்கலாம். ஏன்? நாம் கூட ...

'இவள் எப்படி எல்லாப் போராளிகளோடும் ஏற்றத் தாழ்வின்றிப் பழகப்போகின்றாள்?' என நினைத்ததுண்டு. ஆனால் பழகியபோது புரிந்தது, அவள் இதயத்தில் ஏற்றத்தாழ்வுக்கு இடமில்லை என்பது.

அக்கினோவின் அப்பா தமிழீழத்தின் நேதாஜி - மாமனிதர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் காலத்தில் எங்கள் தலைவனின் கைக்கு இறுக்கமாக வலுவூட்டியவர்.

உண்மைதான். இப்படி ஒரு தந்தைக்குப் பிறந்த குழந்தைகள் எப்படி எங்கள் மண்ணை நேசிக்காமல் இருக்க முடியும்? அக்கினோவின் அப்பா மட்டுமல்ல, அவளது அக்காகூட எங்கள் அமைப்பில் தான் இருகின்றாள்.

தமிழீழம் தனது தலைசிறந்த பெண் போராளிகளில் ஒருத்தியை இழந்துவிட்டது. நாங்கள் ஒரு உயர்ந்த, உன்னதமான தோழியை இழந்துவிட்டோம். அந்தத் தோழியின் வீடோ அமைதியைப் பெற்றெடுத்து விட்டது. அந்த வீட்டின் படிகள் அநேகமான நாட்களில் சிங்கள, இந்தியச் சப்பாத்துக் கால்களையும், துப்பாக்கிக் காவல்களையுமே சந்தித்திருக்கின்றன.

அப்பாவின் தலைமறைவு வாழ்க்கைக் காலத்திலும், அப்பாவின் நிரந்தர மறைவின் பின்னான வாழ்க்கைக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காலத்திலும், அந்தத் துன்ப நிகழ்வுகளின் தாக்கம் அம் மாவை அதிகம் தாக்காது இருப்பதற்காகத் தனது கலகலப் பையே தாயின் கவசமாக்கினாள் அக்கினோ.

இன்று எல்லாத் துயரங்களையுமே அம்மா தனியாகச் சுமந்து கொண்டிருக்கிறாள்.

அக்கினோ எம்மோடு இருந்தபோது ஒரு நாள், "அப் பாவின்ரை படத்துக்கு இடது பக்கம் என்ரை படமும் வலது பக்கம் அக்காவின்ரை படமும் வைக்க இடம் விடுங்கோ அம்மா," என்று தாயிடம் சென்னதாகச் சொன்னாள்.

எங்களுடைய ஒவ்வொரு போராளிகளும் ஒன்றை ஆழமாக உணர்ந்திருக்கின்றார்கள்.

என்றோ ஒருநாள் ...... அது இன்றோ... நாளையோ அல்லது இன்னும் சில காலங்களின் பின்னோ, இந்த மண்ணிற் கான மரணத்தை நாம் சந்திப்போம் என்ற உண்மைதான் அது. அதனால்தானோ என்னவோ சண்டைக்குப் போக வேண்டும் என்று எல்லோரும் சண்டை பிடித்துக் கொள்கின் றார்கள்.

அப்படித்தான் அக்கினோவும்.

சண்டை என்றதும் அவள் சந்தோர்ஷப்படுகின்ற கணங் களைத்தான் பார்த்திருக்கிறோம். விடுதலைப் புலிகள் எல் லோருமே கூறுகின்ற "நல்லா அடிபடவேணும், நிறைய ஆயுதங்கள் எடுக்க வேணும்" என்பதைத்தான் அக்கினோ வும் சொல்லிக் கொண்டிருப்பாள்.

கட்டுவன் சந்தி இராணுவ மினிமுகாம் முன்னால் இவள் காவல் நின்ற காலம்... இவள்தான் குழுவின் இரண்டாவது பொறுப்பாளர். பலாலி இராணுவத்தினர் அடிக்கடி வெளியேற முற்படும் முக்கிய பாதைகளில் கட் டுவன் சந்தியும் ஒன்று. இந்த மினிமுகாமுக்கு முன்னால்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காவல் நிற்கும் எங்கள் குழுவில் அடிக்கடி உறுப்பினர்களை மாற்ற வேண்டிவரும். ஏனென்றால் அடிக்கடி தாக்குதல் நடக்கும்போதோ, அல்லது எதிரி வெளியேறும் போதோ எம்மில் பல போராளிகள் வீழ்ந்திருப்பார்கள், அல்லது காயப்பட்டிருப்பார்கள்.

அக்கினோ வருவதற்கு ஐந்து நாட்கள் முதல்தான் கட்டுவன் நிலையிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன் மோதியதில் சுந்தரியுடன் எட்டுப் போராளிகள் வீரமரணமடைந்தனர். அக்கினோ சென்றசில நாட்களுக்குள் திரும்பவும் அந்த இடத்தில் இராணுவம் வெளியேறியது. கப்டன் சுந்தரி வீரச்சாவடைந்த தாக்குதலில் ஏற்பட்ட எமது தரப்பு இழப்பு அவர்களை உற்சாகப்படுத்தி இருந்தது போலும். ஆனால் அன்றைய சண்டை முடிவோ வேறு மாதிரி இருந்தது. அன்று எதிரிகளைப் பின்வாங்கச் செய்ததில் அக்கினோவின் துப்பாக்கிக்கு அதிக பங்குண்டு.

அக்கினோவுக்குக் கணிசமான ஆங்கில அறிவுண்டு. அத்தோடு எந்தத் துறையிலும் விடயங்களைக் கிரகிக்கும் ஆற்றல் உண்டு. தான் பெற்றிருக்கும் அறிவினை சக போராளிகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு நிறையவே இருந்தது. அதனால்த்தான் பயிற்சி முகாமில்கூட கடும் பயிற்சிகளுக்கு நடுவேயும் அவள் இரவில் அவர்களுக்காக ஒருமணி நேரம் ஒதுக்கி இருந்தாள்.

வவுனியாவில் இராணுவம் வெளியே வந்த காலத்தில் காட்டின் ஒரு பக்கத்தில் இவளின் குழுவும் நின்றது. திசைகாட்டியை (கொம்பாஸ்) எவ்வாறு பிடிக்க வேண்டும் என்று எல்லோருக்கும் தெரிந்திருக்கவேண்டும். எந்த நேரமும் வந்து விழுந்து வெடித்துக் கொண்டிருக்கும் ஷெல்களுக்கு நடுவே ஒரு இடத்தைக் குறிவைத்துத் திசைகாட்டி மூலம் அந்த இடத்துக்குப் போய் வந்து பின்னர் தனது குழுவினருக்கும் அவ்வாறே காட்டிக் கொடுத்துப் போய்வரப் பழக்கினாள்.

காட்டிலே போர் நடக்கும் போது, காடுமாற நேரிட்டால் அதுவே போராளிகளின் இழப்புக்கு மிகப்பெரிய காரணமாகி

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

விடும் போராளிகளின் இழப்பு ஒரு புறமும் இராணுவ முன் னேற்றம் மறுபுறமுமாக பாதகமான தாக்கங்களுக்குத் தான் காரணமாயிருக்கக் கூடாது என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

வவுனியாவிலிருந்து வந்தவுடன் ஆனையிறவுச் சண்டை ஆரம்பித்து விட்டது. வெட்ட வெளிகளில் இராணுவத் தினரை இறங்கவிடாது காவல் செய்யும் பகுதியில் அவள் கடமையிலீடுபட்டிருந்தாள்.

அடுத்தடுத்துச் சண்டைகள், ஓய்வெடுக்க எமது போரா ளிகளுக்கு நேரமில்லை. குண்டுச் சத்தங்களுக்கும் குருதி வெள்ளத்துக்கும் நடுவே எங்கே நாங்கள் ஓய்வைத் தேடு வது? எப்படி ஓய்வெடுப்பது? முப்படைத் தாக்குதலுக்கும் முகம் கொடுத்தபடி முன்னேற வேண்டியவர்களாயிற்றே நாங்கள். களைப்பும் அலுப்பும் இருக்கத்தான் செய்யும். ஆனால் அவையே எம்மைக் கட்டுப்படுத்தி விட முடியுமா? நித்திரை என்பது எம்மை விட்டு நிரந்தரமாகவே வெளி யேறி விட்டால் என்ன என்று எண்ணுபவர்கள்தான் நாங்கள். கண்ணுக்குள் நித்திரை சுழன்று கொண்டிருக்கும். அரைக்கண்ணில் ஆடி ஆடித்தான் நடந்தாலும் கண்மூடி விடமுடியுமா? கண்மூடக் கண்மூட எம்தேசம் காணாமல் போய்விடுமல்லவா? அதனால் தான்...

ஓய்வு இல்லாத தேசத்தின் எந்த எல்லையில் சண்டை நடந்தலும் அங்கு எட்டி நடந்து கொண்டிருக்கின்றோம்.

ஆனையிறவுச் சண்டையின் வேகம் குறைய மணலாற் றில் சண்டை ஆரம்பித்துவிட்டது. அக்கினோவின் குழுவும் மணலாற்றுக்கு விரைகிறது. மணலாறு எங்கள் தேசத்தின் மையப்புள்ளி. மணலாற்றுக் காடுதான் எங்கள் தாய்நாடு. பிராந்துகளிடமிருந்து செட்டைக்குள்ளாய் எமை வளர்த்த தாய்க்கோழி. பிராந்திய வல்லரசு ஒன்றை எமது பிரதேசத் திலிருந்து பின்வாங்கச் செய்யுமளவுக்கு அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்திய இடம். அங்குலம் அங்குலமாக அந்நிய இராணு வம் கால் பதித்துத் தேடிய போதும் தமிழினத்தின் தலை

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

வரைத் தக்க வைத்துக் காத்த பெருமை மணலாறுக்கு மட்டும்தான் உண்டு. குண்டுகளைத் தாங்கித் தாங்கியே மணலாற்றுக் காடு வலிமை பெற்றுவிட்டது. உரிமைப்போர் அல்லவா?

உக்கிரமான சண்டைதான். காடு பற்றி எரிகின்றது. எங்கும் ஒரே புகைமண்டலம்தான். மணலாறு மண் அதிர்ந்து கொண்டே இருக்கின்றது. முதல் நாள் சண்டையின் போது அக்கினோ நின்ற பக்கமாக இராணுவம் முன்னேறியது. அங்குல நிலம் கூட எதிரியை அசையவிடாத சண்டை. அக்கினோவின் குழுவில் இரண்டு போராளிகள்வீழ்ந்து விட்டார்கள். ஒரு உடல் கைப்பற்றக் கூடியதாக இருந்தது. ஆனால் அடுத்தது...... எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில்...... அவர்களுக்கு மிக நெருக்கமாக......

வீழ்ந்த போராளிகளின் உடல்களை மீட்பதற்காகவே புதிய போராளிகள் விழுகின்ற வரலாறுதானே எம் வரலாறு. போர்நிலைமை உடனுக்குடன் பொறுப்பாளருக்குஅறிவிக்கப் படவேண்டும். அக்கினோ அறிவிக்கின்றாள்.

“பொடி எடுப்பது கஷ்டம் தான் அக்கா. ஆனால் எப்படியும் நான் எடுப்பேன்”

தலைநிமிர்த்த முடியாதளவுக்கு தரையோடு தரையாக வரும் துப்பாக்கிச் சூடுகளுக்கு அடியில் ஊர்ந்து முன்னேறினாள். எப்படியோ உடலை எடுத்து விடுகின்றாள். அந்த இடத்தில் அனைவருக்கும் ஒரு உறுதி பிறக்கிறது. கடைசி வரைக்கும் இந்தச் சண்டையில் எந்த உடலும் எம்மால் கைவிடப்படக்கூடாது என்பதில் எல்லோரும் முனைப்பாக இருந்தோம்.

ஒத்துழைக்க மறுத்த காட்டுச்சூழலாலும், நித்திரையோ, குளிப்போ இல்லாத கடமையின் இறுக்கத்தாலும், அநேகமான போரா்ளிகளுக்குக் காய்ச்சல் வந்துவிடுகிறது. அக்கினோவுக்கும் காய்ச்சல்தான்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

காய்ச்சலுடன்தான் மணலாற்றுப் பகுதியில் மகளிர் பிரிவுக்கான மருந்து, உணவு, ரவை விநியோகங்களைப் பொறுப்பெடுத்துச் செய்து கொண்டிருந்தாள்.

இராணுவத்தினர் ஒரு பக்கமாக முன்னேற முயற்சிக்க அக்கினோ அந்த இடத்துக்கு விரைந்து, போராளிகளுக்கு நிலமையை விளக்கிக் கொண்டிருக்கும்போது அவளது அடுத்த குழு நின்ற பக்கமாக விமானம் பதிந்து எழுந்தது. நிலைமையை நேரில் பார்ப்பதற்காக அக்கினோ அந்த இடத்துக்கு ஓடினாள்.

இன்னுமொரு தடவை அந்த விமானம் பதிந்து எழுந்தது.

அக்கினோவின் தசைத் துணுக்குகளும், குருதித்துளிகளும் மணலாற்று மரங்களில் தெறித்தன. அக்கினோ போன்ற நூற்றுக் கணக்கானோரின் இறுதிக் கணங்களை அறிந்து கொண்ட அந்த மணலாற்றுக்காடு இன்று மீட்கப் பட்டுவிட்டது. இந்தியப் போரின் பின் இது இரண்டாவது சண்டை. முன்னையை விட இப்போது உறுதியாய் நிற்கும் மணலாற்றுக்காடு இனிவரும் காலங்களில் இன்னும் உறுதியாக எழுந்து நிற்கும். ஏனென்றால் அதற்குத் தெரியும் தன்னுள் உறங்கும் எங்கள் நண்பர்களைப் பற்றி.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# களத்தில் கலைஞர்கள்

ஆனையிறவுப் போர் ஆரம்பித்து விட்டது. ஒவ்வொரு காலையும் வீரமரணப்பட்டியல் வந்து கொண்டே இருக்கிறது. சாவை எதிர்பார்த்தபடியேதான் நாம் சண்டைக்குப் போவோம்.

சாவுக்கு முன்னால், சாவுக்குள் நின்றுதான் சண்டை பிடிப்பது என்று எமக்குத் தெரியும்.

ஆனாலும் உள்ளத்தில் ஏக்கத்தின் அலைகள். எத்தனை போராளிகளை இழக்கின்றோமோ? எந்தெந்தப் போராளிகளைக் கடைசியாகவேனும் காணாமல் விடுகின்றோமோ? அன்றைய இரவு யுத்தம் எமக்கு எப்படி அமைந்ததோ? என மனதினைக் கேள்விகள் அரித்தபடி இருக்கும். 'ஆனால் கேள்விகளை மட்டுமே கேட்டுக்கொண்டிருக்க முடியுமா எம்மால்? எல்லோரும் தத்தம் கடமைகளில் இசைந்து போயிருந்தனர்.

இரண்டாம் நாள் வீரமரணப் பட்டியல் வந்து விட்டது. அமைதியாக ஏக்கம் எல்லோரையும் கவ்விக் கொள்ள வேலையின் வேகம் குறைகிறது.

ஒருவரிடம் செய்திகள் சொல்லப்படுகின்றன. 'கஸ்தூரியின் வீரமரணம்' கேட்டுக்கொண்டிருந்தவரின் பதில்கேள்வி 'எந்தக் கஸ்தூரி'? 'உங்கட கஸ்தூரி தான்' இதயத்தைப் பிய்த்து விட்ட விடை எம்மை அப்படியே உறைந்து போக வைக்கின்றது. உண்மையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஜீரணிக்க முடியாத செய்தி. நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றால், எம்மால் ஜீரணிக்க முடியவில்லை என்றால் உண்மை பொய்யாகிப் போகுமா? ஒவ்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வொரு காலையிலும் முற்றத்தில் ஒற்றைக் கால் 'ஜீன்ஸ்' சினை மடித்தபடி திரியும் அவள் பாதப் பதிவுகளை தேடி ஒரு பார்வை படர்கிறது. ஆம் கஸ்தூரி!

அவள் வித்தியாசமானவள். அவளிடம் வித்தியாசமான திறமைகள், இவைதான் அவளை நாங்கள் இழக்க விரும் பாமைக்குக் காரணங்கள்.

1987 செப்டெம்பர் 18. நல்லூர் வீதியில் பார்க்கும் இடமெங்கும் மனிதத் தலைகள்தான். மேடையில் திலீபன் அண்ணா. திலீபன் அண்ணாவின் உண்ணாவிரதத்தை ஆதரித்து மேடையில் பேச்சுக்கள், கவிதைகள் ஒலித்துக்கொண் டிருக்கின்றன. ஒரு பெண் கவிக்குரல் உண்மையை உரைக்கின் றது. உள்ளத்தில் இருந்து அது வருகின்றது. திலீபன் அண்ணா மீண்டும் வாசிக்கச் சொல்கிறார். எல்லாப் போராளிகளும் ஏக்கத்தோடு திலீபன் அண்ணாவைப் பார்க்கின்றார்கள். அத்தனை மக்களும் கண்ணீர் மல்க விம்முகிறார்கள். இது அந்தக் கவிதைக்கு மட்டுமே உரித்தான சக்தி. ஆம் அதற்கு மட்டுமே உண்டு. இந்தக் கவிதை தான் கஸ்தூரியை எமக்கு இனங்காட்டியது.

சின்ன வயதிலேயே கலை உணர்வும், எழுத்துக்களும், உண்மையும் இவள் சொந்தங்களாயின. அப்போது கஸ்தூ ரிக்குப் பன்னிரெண்டுவயது. கஸ்தூரியின் அக்காவும் இன்னும் ஊர்ப்பிள்ளைகளும் சேர்ந்து நாடகம் ஒன்றை மேடையேற் றுவதற்காகத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாடகத் தயாரிப்பாளரிடம் சென்று கஸ்தூரி சிறுமிக்குரிய கோபத்துடன் அடம்பிடித்துக் கொண்டு நிற்கிறாள். தானும் அதில் நடிக்க வேண்டும், தனக்கும் ஒரு பாத்திரம் வேண்டும் என்று. இந்த ஆவலை மதித்த தயாரிப்பாளர் 'புறோக்கர்' பாத்திரம் ஒன்றினைப் புதிதாக உருவாக்கிக் கஸ்தூரிக்குக் கொடுக்கிறார். மிகப் பெரிய மகிழ்ச்சியுடன் நடித்த கஸ்தூரிக்குத்தான் அதில் நடிப்புத் திறமைக்கான முதல் பரிசு கிடைக்கிறது. தொடர்ந்து அவளின் திறமையும் தந்தையின் அனுசரணையும் இணைய 'பூதத்தம்பி' ... இப் படிப் பல நாடகங்கள் அவள் திறமையை வெளிப்படுத்தின.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எங்களுடைய போராட்டத்தில் தன்னுடைய பிள்ளையும் ஆயுதப் போராளியாக வரவேண்டும் என்ற ஒரு அப்பாவினால் அனுப்பப்பட்டவள்தான் கஸ்தூரி.

நினைவுகள் பின்னோக்கிச் செல்ல மனதினுள் எங்களுக்குள் ஒவ்வொரு இரவும் நீளக் கூடாதா என்ற எண்ணம். ஆனால் காலம் என்ன எங்கள் கைகளுக்குள்ளேயா கட்டுப் பட்டு இருக்கிறது? தொடர்ந்தும் வீரமரணப்பட்டியல்... சண்டையின் நான்காம் நாள் பட்டியல் ''வானதி வீரமரணம்'' அடுத்த அதிர்வு 'எழுதாத கவிதை' எங்கும் எதிரொலிக்கின்றது. வானதி அக்காவைத் தெரிந்தவர்கள், புரிந்தவர்கள், அரவணைத்தவர்கள், அன்பு காட்டியவர்கள் அத்தனை பேரும் தேடுகிறார்கள். எந்த நேரத்திலும் எப்படிக் கோபம் வந்தாலும் அன்பை மட்டுமே அள்ளி வீசுகின்ற 'வானதி ஆச்சி' யின் அந்தக் கந்தன் 'கருணை'ச் சிரிப்பை.

இதுதான் வானதி அக்கா. ஒவ்வொரு சந்தியிலும் விடுதலைப் பூக்களைப் பிய்த்தெறிய ஆதிக்க மந்திகள் குந்தியிருக்கின்றன.

முரளி அண்ணாவினால் வளர்க்கப்பட்டு அவரது அரசியல் பாசறையில் புடம் போடப்பட்ட வானதி அக்காவிடம் தனது மரணத்தின் பின்னால் இயக்கத்திற்குக் கொடுக்குமாறு ஒப்படைக்கப்பட்ட பெறுமதியான சில பொருட்கள் துரோகிகளினால் காட்டிக் கொடுக்கப்பட்டு வானதி அக்காவின் குடும்பம் ஒரு தாக்குதலுக்கு இலக்காகிய பின் கைப் பற்றப்பட்டு விட்டன. ஓரளவுக்கு வானதி அக்காவை இனங்கண்டு கொள்கிறது இந்திய இராணுவம். முகங்களை மட்டுமே பார்க்கத் தெரிந்த இவர்களுக்கு எம் விடுதலையின் வீச்சைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆதிக்க வெறிக்கு அஞ்சியவர்கள் என்றால் நாங்கள் அடிமைகளாகவே இருந்திருப்போமே? இந்த அடிப்படை உண்மைகளைக் கூட அவர்கள் அறிந்திருக்கவில்லை.

இந்திய அரசின் நயவஞ்சகத்தால் வீரமரணமடைந்த 12 போராளிகளினதும் முதலாமாண்டு நினைவஞ்சலிக் கூட்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டம் திருவில் மைதானத்தில் நடைபெறுகின்றது. சுற்றிவர வல்லாதிக்கத்தின் துப்பாக்கி வேலிகள். ஆனாலும் எம்மக்கள் துணிந்து விட்டார்கள். ஓங்கி ஒலிக்கின்றது வானதி அக்காவின் 'விடுதலைக் குரல்'.

இன்று மகளிர் படைப்பிரிவைப் பொறுத்தவரையில் இரண்டு கவிஞர்களை, இரண்டு கலைஞர்களை நாங்கள் இழந்து விட்டோம். காட்டின் பயிற்சி முகாம் வாழ்வில் இருந்து ஆனையிறவில் வீரமரணம் வரை அவர்களின் கவிக்குரல்கள் ஒலிக்காத இடமில்லை.

ஆடவும் பாடவும் மட்டும் தான் பெண்கள் என்ற நிலையில் இருந்து ஆயுதம் ஏந்தவும் முடியும் என்ற புதிய வரலாற்றை உலகிற்கு உருவாக்கிக் காட்டியவர்கள் எமது பெண் போராளிகள். துப்பாக்கி தூக்கி விட்டால் சுடுவதற்கு மட்டும் தான் இவர்களின் இதயங்களில் இடமிருக்கும் என்றவர்கள் முன்னால் இவர்கள் வெடி குண்டுகளாகத் திரிந்தவர்கள். எங்கள் தேசத்திற்கு எம் மக்களுக்கு எது தேவையோ அதைச் செய்வோம் என்றுணர்ந்தவர்கள். புல்லின் நுனியைக்கண்டு புளகாங்கிதம் அடையும் கலைக் கண்கள் தான் இவர்கள் கண்கள்.

மக்களின் முன்னால் அவர்களை நேசித்து அவர்கள் அழுதால் தாமும் அழுது. அவர்கள் சிரித்தால் தாமும் சிரிக்கும் இவர்கள் தான் எதிரிக்கு முன்னால் எரிமலையாகின்றார்கள். சிலாவத்துறை இராணுவ முகாம் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முப்படைகளுக்கும் ஈடு கொடுத்தபடி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். எமது போராளிகள் விழ விழ விடுதலையின் வேகம் அதிகரிக்கின்றது. வானதி அக்கா தனது குழுவின் சகல போராளிகளையும் இழந்து விட்டாள். வேதனை தந்த வேகத்தினால் மிகவும் முன்னே சென்று விட்டாள். தாக்குதலின் அடுத்த நடவடிக்கையாக கரும்புலி வாகனம் வரப்போவதாக 'வோக்கி அறிவிக்கின்றது' எல்லோரையும்சற்றுப்பின் வந்து காப்பு எடுக்குமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுக் கொண்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டிருக்கின்றன. எல்லோரும் நிலை எடுத்து விட்டார்கள். வானதி அக்கா மட்டும் இன்னமும் நிலை எடுக்கவில்லை.

'பிள்ளைகள் எல்லோரும் போய் விட்டார்கள். நான் என்ர பொயின்ற் பிடிக்காமல் திரும்பமாட்டேன்' இது வானதி அக்காவின் பதில் அறிவிப்பு. நிலை எடுக்குமாறு கட்டளைகளையும் பதிலாக 'பிளீஸ் அவுட்' என்ற பதிலையும் மாறிமாறி வோக்கிகள் அறிவிக்கின்றன. இறுதியில் மகளிர் படைப் பொறுப்பாளர் 'வானதி நீங்கள் அந்த இடத்திலேயே நில்லுங்கள், நான் அங்கே வருகின்றேன்' என்று அறிவிக்கிறார். வானதி அக்காவுக்குத் தெரியும். எங்கள் தலைமைகட்கு தங்கள் உயிர் முக்கியமில்லை. தங்கள் போராளிகள் அநியாயமாகச் சாகக் கூடாது என்பது தான் முக்கியம் என்பது. உடனேநிலை எடுப்பதாக அறிவிக்கின்றாள். அந்த விடுதலை உணர்வின் முன்னாலும் அவள் தலைமைக்குக் கொடுத்த மரியாதை இது. அதே போல் எதிரியுடன் எங்கே சண்டை நடந்தாலும் அந்த இடத்தில் வானதி அக்கா ஒரு எரிமலைக் குழம்பு.

பூவினைப் பார்த்துச்சிரிக்கின்ற இவர்கள் தான் எதிரியின் முன்னால் புயலாகிப் போகின்றார்கள். ஆம்! பலாலியில் இருந்து வெளியேறிய சிறீலங்கா இராணுவத்தினருடன் மிகவும் கிட்ட நின்று புயலாகத்தான் அவள் துப்பாக்கி மொழியில் பேசிக் கொண்டாள். அப்போதுதான், இப்போதும் அவள் கையில் அடையாளமாய் இருக்கும் அந்த விழுப்புண்ணை ஏற்றாள். எங்கள் போராளிகள் எல்லோரும் எல்லோரிடத்திலும் அதிகமாக அன்பு செலுத்துபவர்கள்.

காட்டிற்குள் நாம் பத்திரிகைகளில் புதினங்களைத் தேட வானதி அக்கா மட்டும் மரண அறிவித்தல்களைப் பார்ப்பாள். ஏனென்றால் அவள் காட்டிற்குள் வரும் போது அவளது அப்பா கடுமையான சுகயீனமாக இருந்தார்.

இவர்கள் எல்லோரும் பந்த பாசங்களைப் பலப்படுத்த விரும்பியவர்கள் தான். ஆனால் விடுதலை அடைந்த எம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேசத்தில் சுதந்திரம் அடைந்த எம் மக்கள் கூட்டத்தினுள் அவற்றைத் தேடத் துடித்தார்கள்.

கானக வாழ்வில் இருந்து நாட்டுக்கு வந்த ஆரம்ப காலமாகும். மாவட்டச் செயலகத்தில் வானதி அக்கா, கஸ்தூரி இன்னும் பல பெண் போராளிகள். கஸ்தூரியின் அப்பா மெதுவாக அருகில் வருகின்றார். சற்று விலகியபடி ''என்னப்பா'' என்கிறாள் கஸ்தூரி. ''இங்கே அலுவலாக வந்த இடத்தில் நீ நின்றதால் பார்ப்போம் என்று தான்...'' அவரின் பதில் முடியவில்லை. ''அப்பா நீங்கள் அடிக்கடி வந்து பார்த்து பாசத்தை வளர்த்துப்போட்டு நாளைக்கு சண்டை எண்டு வரேக்க என்ர உடல் கிடைக்குதோ இல்லையோ தெரியாது. அப்படிக் கிடைத்தாலும் அது எப்படி வருகுதோ தெரியாது. ஆனபடியால் அடிக்கடி நீங்கள் என்னை வந்து பார்க்காதேயுங்கோ,'' பதில் அன்பாக ஆனால் உறுதியாக வருகிறது கஸ்தூரியிடமிருந்து. அப்பா 'நீ என்னைப் புரிந்து கொண்டது இவ்வளவுதானா? இப்படி இருந்தால் உன்னை நான் இயக்கத்திற்கு அனுப்பியிருப்பேனா?' என்றபடி நடக்கின்றார். ஆனால் பிள்ளையைப் பார்த்ததை விட தன் பிள்ளை இயக்கத்தில் வைத்த பற்றுத் தான் அவரை மகிழ்வோடு நடக்க வைத்தது. ஏனென்றால் இந்த விடுதலைப் போரை இந்தப் போராட்ட அமைப்பை அதிகமாக நேசித்த தந்தை அல்லவா அவர். வார்த்தைக்கு வார்த்தை 'எங்கடை சனம் எங்கடை சனம்' என்று உச்சரிக்கும் இவர்கள் இன்று எங்கடை சனத்துக்கை இல்லை. ஆனால் இந்த சனத்தின்ரை நல்வாழ்வுக்காக அவர்கள் ஒரு சுதந்திரமான மக்களாக வாழ்வதற்காக ஒலித்த இவர்களின் குரல்கள் இன்றும் எம் மக்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டு தான் இருக்கின்றது.

இவர்களின் கவிதைகள் எம் மக்களை தட்டி எழுப்பி இருக்கின்றன. வானதி அக்கா மாணவர்களுக்குக் கொடுத்த விளக்கங்கள் அவரின் குரலின் ஒரு பக்கம்.

கஸ்தூரி 'புலிகளின் குரல்' வானொலியின் தொடர் நாடகமான 'சிந்தாமணி'யில் ஆச்சியாக குரல் கொடுத்தாள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

'கலை பண்பாட்டுப் பிரிவின் தெருக் கூத்தில் போராளி யாகத் தன்னை பாத்திரமாக்கினாள். 'களத்தில் காத்தான்' சிந்துநடைக் கூத்தில் இந்தியச் சிப்பாயாக வந்து எமதுமக்கள் இந்திய இராணுவத்தால் பட்ட அவலங்களைத் தெளிவு படுத்தினாள். எந்தப் பாத்திரத்தை கஸ்தூரிக்குக் கொடுத் தாலும் அந்தப் பாத்திரம் கஸ்தூரியினால் சிறப்புப் பெற் றுத்தான் ஆகவேண்டும். இது கஸ்தூரியின் திறமையின் வெளிப்பாடு. இன்று எம்மக்கள் அந்தப் பாத்திரங்களை பேசிக்கொள்கின்றார்கள். அந்தக் குரலை மீண்டும் கேட்க அந்த முகங்களை மீண்டும் பார்க்கத் துடிக்கிறார்கள்.

அடிமை இருளிலும், அறியாமை குகைக்குள்ளேயும் அடைபட்டுக் கொண்டிருக்கும் பெண்களுக்கு விடுதலை வேண்டும். அடுப்படிப் புகைக்குள்ளேயே இருந்து அடை யாளம் தெரியாமல் போன பெண்களின் அவலநிலையை இந்த சமூகம் அறியவேண்டும். கணவனை இழந்த கைம் பெண்ணை நிழலாகத் தொடரும் வேதனைகளை இந்த உலகம் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காய் 'தீக்குளிக் கோம், தீயிட்டெரிப்போம்' என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்து மேடையேற்றிய அந்தத் திறமை அவளுக்கு மட்டும்தான் உண்டு.

சண்டைக்குச் செல்லும்போது எமக்குள் பெரிய கற் பனை ஒன்று. சண்டை முடிந்துவர கஸ்தூரிக்கு ஒரு அணியினைக் கொடுத்து தேசவிடுதலை, சமூகவிடுதலைக் கருத்துக்களை விதைக்க இந்த அணி கலைகளுக்கூடாகச் செய்விக்க வேண்டும். ஒருபூரண விடுதலையை வென்றெடுக்க இந்த 'கலைஞர்'களைப் பயன்படுத்த வேண்டும் என்பது தான் அது. ஆனால் ...

எளிமை! இது அவர்களின் குழந்தை.

தனது புதிய சீருடையை இங்கே யாருக்காவது கொடுங் கள் என வைத்துவிட்டுச் சென்ற கஸ்தூரியையும் தன் பிள்ளைகளோடு ஆண்டியாகவே திரிந்த வானதி அக்காவை யும் எம் கண்கள் தேடுகின்றன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வசதியை இவர்கள் தேடியதே இல்லை. மாணவ ரமைப்பு வேலைகள் செய்யும்போது காங்கேசன் துறையில் இருந்து பூம்புகார்வரை வானதி அக்காவின் சைக்கிள் ஓடும். முகாமில் மோட்டார் சைக்கிள் சும்மா நின்றாலும் ஒரு துவிச்சக்கர வண்டியின் துணை போதும் கஸ்தூரிக்கு, வேலையை மட்டும் தான் அவர்கள் தேடினார்கள்.

கடைசியாகச் சண்டைக்கு புறப்படும்போது ''இந்த ஆனையிறவு முகாமை எப்படியும் நாங்கள் பிடிக்க வேண்டும்'' இது வானதி அக்கா. 'சண்டையில் எல்லோரும் 2 ஆயுதம் எடுத்தால் நான் 4 ஆயுதம் எடுக்க வேண்டும், திரும்பி வந்தால் நாடகம் போடவேண்டும். புதிய பாடல் கள் கொண்ட ஒலிப்பதிவு நாடா ஒன்றை மகளிர் படை வெளியிடவேண்டும்' இது கஸ்தூரி. முன்பு விபத்தில் கஸ்தூரியின் ஆயுதம் சிறிது பழுதாகி விட்டது. அதுதான் நான் எல்லோரையும்விட இரண்டுமடங்கு எடுக்கவேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

இன்று அவர்கள் இல்லை. எமக்குத் தெரிவதெல்லாம் அவர்களின் அபிலாசைகள், அவர்களின் இலட்சியங்கள் தான்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# களத்திலிருந்து ஒரு கடிதம்

அன்புச் சகோதரி,

களத்தில் நிற்கும் தங்கை எழுதுகிறேன். இந்தக் கடிதம் கிடைக்கும் பொழுது அனேகமாக நீ எங்கோ ஒரு தோட்டத்தில் கொதிக்கும் வெயிலில் கூடைச் சுமையுடன் கொழுந்தெடுத்துக் கொண்டிருப்பாய். இந்நிலையில் எத்தகையதொரு கொடிய துயரங்களை நெஞ்சுக்குள் அமுக்கிக்கொண்டு உன் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கிறாய் என்பதையும் நான் நன்கு அறிவேன். எத்தனை சந்தர்ப்பங்களில் இத்துன்ப வாழ்விலிருந்து விடுபட வேண்டுமென்று துடித்து இருப்பாய் என்பதையும்கூட என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆயினும் என் உணர்வுகளை உன்னோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவதால் உரிமையுடனும், பாசத்துடனும் இம்மடலை உனக்கு வரைகின்றேன்.

அன்று எம்மையெல்லாம் அடக்கியாண்ட வெள்ளையரால் உன்பாட்டனும், கொப்பாட்டனும், கோப்பித் தோட்டங்களில் வேலை செய்வதற்காக மந்தைகளை ஏற்றிவருவது போல் அவர்களின் மனித உணர்வுகளை மதிக்காது ஏற்றி வந்த மக்கள் கூட்டத்தினுள் வந்ததை நீ கதைகதையாய் அறிந்திருப்பாய். தமிழகத்தில் பஞ்சத்தோடும், பட்டினியோடும் போராடிய அவர்களை ஆசை வார்த்தைகளைக் கூறி ஏமாற்றித்தான் இங்கு கூட்டிவந்தார்கள். அவர்கள் வரும்போது பட்ட துன்பங்கள்... அப்பப்பா... நீயோ நானோ அறிந்திருக்க நியாயமில்லைத்தான், ஆனால் அதனை அறிந்த போது நான் எவ்வளவு வேதனைப்பட்டேன். என்னைவிட நீ அதிகம் வேதனைப் பட்டிருப்பாய் என்று எனக்குத் தெரி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யும். எவ்வளவு எதிர்பார்ப்புகளைச் சுமந்துகொண்டு வந்திருப்பார்கள். ஆனால் அவை எல்லாம் வெறும் கனவுகளாகவே தொலைந்திருக்கும். உன் முந்திய சந்ததியினர் வரும்போது எத்தனைநாள் உண்ணாமல், ஏன் நீர்கூட அருந்தாமல் வழிவழியே காட்டுக்குள்ளேயே மண்ணோடு மண்ணாகினர். தாயைப் பறிகொடுத்த பிள்ளையும், பிள்ளைகள் இறந்துவிடத் தாயும் உடல்களை அப்படியே விட்டுவிட்டுக் கதறித்துடிதுடித்து வந்த கதைகள் நிறைய உண்டு. இவற்றையெல்லாம் நான் எழுதுவது கடந்தகால வாழ்க்கையை உனக்கு ஞாபகமூட்டி உன்னை வேதனைப் பட வைப்பதற்காக அல்ல. உன் மூதாதையர் அந்த வெள்ளையரினால் பட்ட கஷ்டங்களை ஆழமாக அறிந்து அதனைப் புரிந்துகொண்டு நீ இந்த அடக்குமுறையை உடைத்தெறிந்து ஒரு சுதந்திரப் போராளியாக வெளிவர வேண்டும், என்பதற்காகத்தான்.

இங்கு வந்து நீ இப்போது இருக்கும் பசுமை நிறைந்த மலையகத்தை உருவாக்க அவர்கள் சிந்திய வியர்வைத் துளிகள்,கண்ணீர்த் துளிகள்... இவற்றை வெறுமனே வார்த்தைகளால் எழுதிவிட முடியாது. அந்தக் காடுமேடுகளை உடலை வருத்தி வளமான மண்ணாக்கப் பாடுபடுவது ஒரு புறமிருக்க, தமிழ் நாட்டில் வித்தியாசமான கால நிலைகளில் வாழ்ந்து பழகியவர்கள் மலைநாட்டின் பனிக் குளிரை எப்படித்தாங்கியிருப்பார்கள்? இந்தக் குளிரைத் தாங்கமுடியாது இறந்து இம்மண்ணுக்கு உரமானவர்கள் எத்தனைபேர்? இவை எல்லாம் உனக்குப் புதிதல்ல. இவற்றை நீ உன் சகோதரிகளுக்கும் தெளிவாக உணர்த்தி அவற்றிலிருந்து வெளியேறுவதற்காக நீங்கள் போராட வேண்டிய காலம் வந்துவிட்டது.

இன்று நாள்முழுக்க நீயும், உன் பெற்றோர்களும், சகோதரர்களும், மாடாய் உழைத்தாலும் நீங்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவு, உடை, இருப்பிடம் இவற்றிற்கே பெரும் கஷ்டப்படுவதை நீ நேரடியாகவே கண்டும் அனுபவித்தும் இருப்பாய். எந்தவித சிறு முயற்சி

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கூட இல்லாமல் உங்கள் துரைமார் எத்தகைய வசதிகளுடனும், சுகங்களுடனும் வாழ்கிறார்கள். இப்படியே பெருமளவான உன் சுற்றத்தார் உழைத்துக் கஷ்டப்பட சிறிதளவு முதலாளிமார் உடல் உழைப்பின்றி, சுகமாக வாழும் இந்த முரண்பாடு எப்படி வந்தது என்று சிந்தித்துப்பார். உனது குடும்ப வறுமைநிலை உன்னைப் போராடவிடாது தடுக்கலாம். ஆனால் நீ போராடினால்தான் அந்த அடிமை வாழ்விலிருந்து விடுபட்டு உன்னதமான மனித வாழ்க்கையின் தார்ப்பரியத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

அன்புச் சகோதரியே, நான் பலசமயங்களில் எண்ணி இருப்பேன் வெள்ளைத்துரைமார்கள் முதல் இன்றுள்ள துரைமார்கள் வரை உங்களைக் கசக்கிப் பிழிவதால்தானோ என்னவோ தேயிலைச் சாயம் சிவப்பாக இருக்கிறது என்று.

நீங்கள் தேயிலைக் கொழுந்துகளைப் பறிக்கும்போது உங்களில் அட்டைகள் கடித்து ரத்தம் குடிப்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நீ அட்டைக்கடியின் வேதனையை அனுபவித்திருப்பாய். ஓயாது உழைத்து, உயிர் வாழ ஜீவமரணப் போராட்டம் நடத்தும் உங்களின் வாழ்வு, சீர் குலைந்து போவதற்கு இந்த மனித அட்டைகளும் தான் காரணம் என்பது உனக்கு தெரியும். தெரிந்தாலும் இன்னும் சற்று ஆழமாக ஊடுருவிப் பார்த்தாயானால் இந்த அட்டைகள் தாமாக விழாது; எம்மால் விழுத்தப் படவேண்டியவை என்பதை நீயும் ஏற்றுக்கொள்வாய்.

உங்கள் மூதாதையர் வெட்டிக்கொத்தி வளமாக்கிய மண்ணை வெள்ளையரை அடுத்துவந்த சிங்கள அரசுகள் உங்களிடமிருந்து பலவந்தமாகப் பறித்து சிங்கள மக்களுக்கு கொடுத்தார்களே அப்போது அதனை எதிர்த்து நெஞ்சுரத்தோடு உங்களுக்காக அந்த மண்ணை மீட்கப் போராடிய உன் அண்ணன் சிவனுலட்சுமணனை அரசின் அதிகாரப் பொலிஸ் படை சுட்டுக் கொன்றதை உனது ஆயா ரத்தம்தோய்ந்தநாளைய நினைவுகளோடு உனக்குச் சொல்லியிருப்பாளே.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

இதை மட்டும் அவர்கள் செய்யவில்லை. 1948 -ம் ஆண்டு உங்கள் குடியுரிமையைப் பறித்து உங்களை நாடற்றவர்களாக்கினார்களே! தொடர்ந்து 49-ல் வாக்குரிமையையும் பறித்து அரசியல் அநாதைகள் ஆக்கிய கொடுமையை என்னவென்று சொல்வது. சில வருடங்கள் ஒரு நாட்டில் இருந்தாலே குடியுரிமையைப் பெற்றுவிடலாம். ஆனால் நீயும் உன் சகோதரர்களும் பரம்பரையாக இங்கு வாழ்பவர்கள். உங்கள் குடியுரிமையைப் பறிப்பதற்கு இவர்கள் யார்? இவர்களும் உங்களைப் போன்றவர்கள் தானே? அவர்களுக்குத் தெரியும் உங்கள் குடியுரிமையைப் பறிக்காவிட்டால் நீங்கள் ஒரு மாபெரும் சக்தியாக வளர்ந்து பலம் பெற்றுவிடுவீர்கள் என்று.

இச்சமயத்தில் முக்கியமான ஒன்றை நான் ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆட்சிபீடம்ஏறிய சிங்கள அரசு முதல் வேலையாக உங்களுடைய குடியுரிமையைப் பறிப்பதற்குரிய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் ஒப்பேற்ற வந்தபோது ஒரு தமிழனாக இருந்தும் அகில இலங்கைத் தமிழ்காங்கிரசின் தலைவரான ஜீ. ஜீ. பொன்னம்பலம். அச்சட்டமூலத்தை ஆதரித்து வாக்களித்த அந்த வரலாற்றுத் துரோகத்தை நாம் மறக்கவில்லை.

இவையெல்லாம் உன் வாழ்க்கைக் காலத்திற்கு முந்தியவை. ஆனால் நீ நேரிலேயே பல துன்பங்களை அனுபவித்திருப்பாய். காலத்திற்குக் காலம் உன் மக்கள்மீது நடாத்தப்படும் இனவெறித் தாக்குதல்களால் உங்களில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர். எத்தனை மக்கள் கை, கால் இழந்தனர். எத்தனை சகோதரிகள் பாலியல் சித்திரவதைக்கு உள்ளானார்கள். நீங்கள் குடியிருக்கும் அந்தச் சிறு லயன்களைத்தான் விட்டார்களா? எல்லாவற்றையும் தீ மூட்டி எரித்தார்களே. இவையெல்லாம் உன் நெஞ்சினுள் விடுதலைத்தீயை மூட்டியிருக்கும்.

அதிகாலைப் பனிக்குளிரில் ஆலைச்சங்கு அலறி ஒலிக்க அந்தப் பனிக்குளிரிலும் அரக்கப்பரக்க எழுந்து சாயத்தண்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ணீரை ஊற்றிவிட்டு, அரையும் குறையுமாக போதாமல் இருந்தமாவை ரொட்டிசுட்டு உங்கள் எல்லோருக்கும் தந்து விட்டுபசித்த வயிற்றுடன் குழந்தைக்குப் பாலூட்டிவிட்டு, அதனைப் பிள்ளைப் பராமரிப்பு நிலையத்தில் விட்டுவிட்டு கொழுந்து பறிக்கக் கூடையைச் சுமந்தபடி ஓடிச்செல்லும் உன் ஆயா; கொழுந்துபறிக்க வயது காணாததால் கையில் கத்தியிடன் இடுப்பில் தம்பியையோ, தங்கையையோ சுமந்த படி துரையின் தோட்டத்தில் புல்லறுக்கப் போகும் அந் தப் பிஞ்சுகள், இவர்களில் சிலர் தங்கள் ஆயாக்களுக்கும், அப்பாக்களுக்கும் தோட்டங்களுக்கு சாயத் தண்ணீர் கொண்டு செல்லும் தளர் நடைக்காட்சி...... அருமைச் சகோதரியே உன் கண்கள் கலங்குகின்றனவா? உன் கண் களில் கண்ணீர் துளிர்ப்பதை அனுமதிக்காதே. பதிலாக விடுதலையை வேண்டும் அக்கினிப் பொறியை ஏற்றிக்கொள். அப்போது இந்த அடிமை விலங்குகள் உடைந்து நொருங் கும்.

இப்படியான நிலைமைகளினை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுதான், தங்களைத் தலைவர் எனக் கூறிக்கொண்டு உங்களைச் சிலர் ஏமாற்றுகின்றார்கள். அவர்கள் வீட்டு நாய்களுக்கு இருக்கும் சுகங்களுடனும், வசதிகளுடனும் உன்னை ஒப்பிட்டுப்பார். அப்போது அடி மைத்தனத்தின் ஆழம் தெளிவாகும்.

உன்னைச் சூழ்ந்திருப்பவர்களுக்கு நோய் வந்தால் வைத்துப் பராமரிப்பதற்குப் போதுமான மருந்துகளுடனான வசதிகளுடன் வைத்தியசாலைகள் கட்டியிருக்கின்றார்களா? இந்தத் தேயிலைச் செடிகளுக்குத் தங்கள் உடலை உர மாக்கிய உன் மக்களின் குழந்தைகள் கல்விபயில ஒரு பள்ளிக்கூடந்தானும் சரியான நிலையில் இல்லையே. தேயி லைக் கொழுந்து எடுக்க வயது காணாவிடில் அவர்கள் புல்லறுக்கும் கத்தியுடன் துரைமாரின் தோட்டத்தில் புல்லரி வதைத்தான் என் கண்கள் காண்கின்றன. மூக்கில் இருந்து சளி வழிய வழிய-புல்லறுக்கும் வயதா அவர்களுக்கு? ஆனால் அவர்கள் கத்தியுடன் சட்டையில்லாத வற்றிய உடலுடன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எதிர்காலத்தைக் கேள்விக்குறியோடு அல்லவா சந்திக்கப் போகிறார்கள். இவர்களை வளமாக வாழவைக்க வேண்டிய பொறுப்பு எங்கள் கைகளில்தானே உள்ளது.

மேலும் சிறிய கோழிக்கூடு போன்ற லயத்திற்குள் எத்தனை உயிர்கள்? கால் நீட்டியபடியே இருக்க முடியாது என்றால், எப்படிப் படுத்துறங்க முடியும்? எனவே மகத்தான மனிதவாழ்வுக்கு அத்திவாரமிடும் அந்தச் சுதந்திரத்தைப் பெற நீயும் உன் மக்களும் முழுப்பலத்துடன் அணி திரள வேண்டும்.

இன்னும் இலங்கையில் ஆகக்குறைவான ஊதியம் பெறும் தொழிலாளர்கள் நீயும் உன்னைப் போன்றவர்களுமே. உவ்விடத்தில் தோட்டத்தில் வேலைசெய்யும் நீயும் உன் சகோதரிகளும் உங்கள் துரைமாரின் கெட்ட நோக்கங்களை வெறுத்து எதிர்ப்பதால் வேறு வழியில் அவர்கள் உங்களை மோசமாகப் பழிவாங்கி இருப்பார்கள். இதனால் நீ மிகவும் பாதிப்படைந்திருப்பாய். எதிர்க்க முடியாதவர்கள் அவர்களின் கெட்ட நோக்கங்களுக்குப் பலியாகிவிட்ட துயர வாழ்வு உன்னைப் போராடத் தூண்டும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்த அடிமை நிலையிலிருந்து மீள, உனது உயிருக்கும் உடலுக்கும் பாதுகாப்புத்தரவென்று கூறிவரும் எந்தத் தலைவரையும் நம்பாதே. உனது காலில் உனது சுதந்திரத்தைப் பெற நீதான் முயற்சிக்க வேண்டும். இன்றுவரை தம்மை உங்களின் தலைவர்கள் என்று பீற்றிக்கொண்டு திரியும் உங்கள் தலைமைகள் உங்கள் உரிமைகட்காக என்ன செய்தார்கள்? உங்களை சிங்கள அரசிடம் அடகு வைத்து அதன் மூலம் தமது நலன்களை பெருக்கியதோடு உங்கள் போராட்டங்களையும் கொச்சைப்படுத்தியது தான் அவர்கள் உங்களுக்குச் செய்தவை. இத் தலைவர்கள் எத்தனை எஸ்டேட்டுகளுக்குச் சொந்தமாக இருக்கிறார்கள்? உன் மக்கள் லயனை விட்டுத் துரத்தியடிக்கப்பட்டு அவர்கள் தெருத் தெருவாய் அலையும்போது இவர்களால் ஒரு சிறு துண்டு நிலமாவது கொடுக்கமுடியாது போனது ஏன்?

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

இவர்களைப் போன்ற சிறு முதலாளிகள் உன் தம்பி தங்கைகளை வேலைக்காக வேறுமாவட்டங்களுக்குப் பேரம் பேசி, கொண்டு செல்வதை நீ அறிவாய். அங்கு அவர்கள் படும் வேதனைகள்; இந்தச் சின்ன வயதில் எவ்வளவு பெரிய வேலைகள் அவர்கள் மீது சுமத்தப்படுகின்றன. மூச்சிரைக்க மூச்சிரைக்க அவர்கள் வேதனைப்படுவது உனக்கோ உன் ஆயாவுக்கோ தெரிய நியாயமில்லைத்தான். அவர்கள் ஏதாவது சிறு தவறினைச் செய்யும்போதுகூட 'கள்ளத் தோணிகள்' என்று திட்டும்போது எதுவும் புரியாத அந் தப் பிஞ்சுகளின் கண்களில் நீர் முட்டிவிடும். அவர்கள் நோய்வாய்ப்படும்போது சரியான மருந்து இல்லாவிடினும் அருகில் இருந்து அன்பாக ஆறுதல் சொல்ல எவர் இருக் கிறார்கள். இந்தச் சோக வாழ்வை நெஞ்சில் சுமந்தபடி பெரிய வேலைகளை எப்படிச் செய்து முடிக்கப்போகின் றோம்; ஒரு சிறு நேர ஓய்வாவது கிடையாதா என ஏங் கும் கண்களுடன் நடைப்பிணமாக அவர்கள் தள்ளாடுவதை நீ பார்த்தால் ......

உன் படித்த சகோதரர்கள் வேலை தேடிச் செல்லும் போது அவர்களைப் பார்த்து குடியுரிமை இருக்கிறதா என்றுதான் முதலில் கேட்பார்கள். பிறந்த பிஞ்சுகள் பாதங்கள் பதித்து ஓடிவிளையாடிய உனது மண்ணில் இந்த அவல நிலை.

மேலும் அவ்வப்போது பிற தேசங்களிலிருந்து தொழில் வாய்ப்புக்காகவோ, வியாபாரத்திற்காகவோ, வந்தவர்கள் உங்கள் சிறுவர்களைக் கசக்கிப் பிழிந்ததையும்,

ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி எல். எவ், ரெலோ ஆகிய தேசத்துரோகிகள் உன் சகோதரர்களை பொலிஸ் படையில் சேர்த்து நிறையச்சம்பளம் தருவதாக ஏமாற்றிக் கூட்டிவந்து இங்கே பலாத்கார இராணுவத்தில் சேர்க்கி றார்கள். இதன் மூலம் இந்தியாவின் கைக்கூலிகளாகச் செயற்பட வைத்து அநியாயமாகச் சாகடிக்கப்படுவதையும் நீ அறிந்திருப்பாய்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எனவே காலம் காலமாய் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் இந்த அடிமை வாழ்வை எதிர்த்துப் போராட வேண்டிய பெரியதொரு கடமை உனக்காகக் காத்திருக்கின்றது. நீங்கள் ஒன்றுசேர்ந்து போராடினால் உங்கள் மாபெரும் சக்தியை வெல்ல எவராலும் முடியாது. எனவே இறப்புக்களையும் அழிவுகளையும் தாங்கி உன் சகோதரன் சிவனுலட்சுமணன் காட்டிய நெஞ்சுரத்தோடு போராடு. அப்போது உங்கள் முதலாளிகள் முகத்துக்கு முக்காடு போட்டு தங்கள் முகங்களை மறைப்பார்கள். உன் தம்பி, தங்கைகள் ஆடிப்பாடி விளையாடுவார்கள். இவற்றையெல்லாம் கடிதமூலம் எழுதுவதை விடவும் நேரில் உன்னிடம் வந்து கதைப்பதையே எனது மனம் மானசீகமாக விரும்புகிறது. ஆனால் நான் தமிழீழத்தின் விடுதலைக்காக எங்கள் பிஞ்சுகளின் சுதந்திரவாழ்வுக்காக கையில் கருவி ஏந்தி களத்தில் நிற்கிறேன் இந்த சூழ்நிலையில் இப்போது உன்னிடம் என்னால் வரமுடியாதிருப்பதை நீ புரிந்து கொள்வாய். ஆனாலும் நீயும் உன் சகோதர சகோதரிகளும் சேர்ந்து காணப்போகும் அந்தப் புதுயுகத்தில் நானிருந்தால் உன் விடுதலையைக் காண ஓடோடி வருவேன்.

இப்படிக்கு,
அன்புச் சகோதரி,
ஜீவா.

# வெள்ளையம்மா

கருக்கல் பொழுது. அப்படித்தான் அந்தநேரத்தை எல்லாரும் சொல்லுவினம். நல்ல வெயில் காலம். வல்லை றோட்டின் இரண்டு பக்கங்களிலும் விரிந்துபரந்து கிடந்தன வயல்த் துண்டுகள். சில வயல்த்துண்டுகள் உழுது கிடந்தன. சில அப்படி அப்படியே காய்ந்து போயிருந்தன.

காய்ந்து வரண்டு போய்க்கிடந்த அந்த வயல்த் துண்டுகளைப் பார்க்க வெள்ளையம்மாவிற்குப் பரிதாபமாக இருந்தது.

''என்ன செய்ய நெடுக ஒரேமாதிரியாக இருக்க ஏலுமே, கதிரைத் தள்ளப்போகிற நெல்லுகள் பச்சையாக நின்று தலையசைக்கிற காலத்தில இந்த வயல்களைப் பார்க்க நல்லாய்த்தான் இருக்கும். இப்ப என்னடா எண்டால் காய்ந்து வரண்டு... அதுக்கென்ன செய்யிறது. இப்படித்தான் எல்லாம். நல்லதும் கெட்டதும் மாறி மாறி வருகிற மாதிரி... ஏன் இப்ப என்ன, இதைப் பார்க்க அருவருப்பாகவே கிடக்குது. எல்லாம் பார்க்கிற கண்ணுகளைப் பொறுத்ததுதான்'' என தன்மனசுக்குள் சொன்னாள்.

வெள்ளையம்மா மினிபுஸ்சின் யன்னலோரமாக அமர்ந்திருக்கிறாள். அவளுக்கு எல்லாம் எதிர்த்திசையில ஓடுவது போல இருந்தது. அப்படித்தான் அவளின் நினைவுகளும் மாறி மாறி வருகின்றன.

இப்பிடித்தான் வெள்ளையம்மா முந்தியும், மினிபஸ்ஸிலை தன்ரை சொந்த அலுவல்களுக்காக என்றில்லாமல் வேற தேவைகளுக்காகப் போயிருக்கிறாள். அதெல்லாம்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

அவளுடைய பிள்ளை மஞ்சுவோடதான். மற்றபடி வெள்ளையம்மாவுக்கு தெரிந்ததெல்லாம் அல்வாயின் ஒற்றையடிப் பாதைகளும், ஊர்ச்சந்தையும், சங்கக் கடையும்தான். இப்ப வெள்ளையம்மா அப்பிடி இல்லை. எந்த இடத்திற்கெண்டாலும் தேவையானவர்கள் கூப்பிடும் போது அவள் போய்விடுவாள்.

அண்டைக்கும் அப்பிடித்தான், இரண்டு கிழமைகளாக ஆஸ்பத்திரியில நிண்டு தன்ரை கடமைகளைச் செய்து போட்டு மனத்திருப்தியுடன் 'வீட்டை ஒருக்கால் பாத்திட்டு வருவம் எண்டுதான் போகிறாள்.

''எப்பிடி இருந்த நான் எப்பிடி எல்லாம் மாறி இருக்கிறன். எல்லாம் என்ர பிள்ளைக்காகத்தான். இனி நான் உயிரோட இருக்கிற காலம் வரைக்கும் என்ர பிள்ளை எதை விரும்பிச் செய்துதோ அதைத்தான் நானும் செய்ய வேணும். இரவோ பகலோ என்ன கஸ்ரம் வந்தாலும் இனி நான் அப்பிடித்தான் இருப்பன்'' வேதனையும் துன்பமும் வெள்ளையம்மாவை முட்டி மோதினாலும் அவற்றிற் கூடாகவும் அவள் உறுதி எடுத்துக் கொள்கிறாள்.

உறுதி எடுத்துக் கொண்ட வெள்ளையம்மா தன்னையும் அறியாமல் 'சீற்றில்' நிமிர்ந்து உட்காருகிறாள். உடைந்து போயிருந்த அந்தமினிபஸ் கண்ணாடியை மெதுவாகத்திறந்து வெள்ளையம்மா வெளியே தூரப்பார்க்கிறாள். நினைவுகள் அவளை எட்டக் கொண்டு போயின. அவைகளுக்கு துயரத்தின் தன்மைகள் விளங்குவதில்லைப் போலும், வெள்ளையம்மாவை அடிக்கடி அவை துன்புறுத்துவது வழமையாகி விட்டது.

1970களாயிருக்கும்,

வெள்ளையம்மாவிற்கு மூன்று பிள்ளைகள். இரண்டு ஆண்களும் கடைக்குட்டியாய் செல்லமாய் மஞ்சுவும் தான்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவர்கள். மூன்று பிள்ளைகளும், வெள்ளையம்மாவும் அவ ளின் கணவனுமாக சந்தோசமாய்த்தான் இருந்தது அந் தக் குடும்பம், பிள்ளைகள் படிக்க வேணும், அவர் களின் வாழ்வு நன்றாக இருக்க வேணும் என்றுதான் தந்தை வெயில் மழை என்றில்லாது உழைத்தார். பிள்ளை கள் வீட்டில் இல்லாத நேரம் இருவரும் ஆறுதலாக வீட்டு வேப்பமரத்தின் கீழ் இருந்து பிள்ளைகள் பற்றிக் கதைத்து மகிழ்ந்தார்கள்.

அந்தச் சந்தோசமான நிகழ்வுகள் கனகாலம் நீடிக்க வில்லை. அப்போது மஞ்சுவுக்கு நாலு வயது அண்ணன் மாருக்கு 6வயதும் 7½வயதும் ஆகிவிட்டன. இந்த எதிர் பார்ப்புக்கள் எதையுமே காணாது கெதியாகவே போய் விட்டார் தந்தை. கணவனின் மறைவு வெள்ளையம் மாவை அதிகமாகத் தாக்கினாலும் கவலைப்பட்டுக் கொண்டே காலத்தைப் போக்க முடியுமா? அப்பிடியென் றால் பிள்ளைகளின் வாழ்வு என்னவாகும். அவர்களை வளர்க்க வெள்ளையம்மா உழைத்துத்தானே ஆகவேணும்.

காலையில் எழுந்து சாப்பாடு செய்தல், வீடு கூட்டு தல், பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புதல் என வீட்டைச் சுற்றி இருந்த வெள்ளையம்மாவின் உலகம் இப்போது அப்படியல்ல. வயல் விதைக்க வேணும். அதற்குரிய அத் தனை வேலைகளையும் அவள்தான் செய்ய வேணும். தோட்டத்தில் பயிர்வைக்க வேணும். குத்தகைப் பணம் கட்ட வேணும். மொத்தத்தில் அவளுக்கு தெகையான வேலைகள். வெள்ளையம்மாவின் பிள்ளைகளோ அவள்மேல் உயிர். ஏனென்றால் அவர்களுக்கு அம்மாவும் அப்பாவும் அவள்தானே. வயிற்றுப் பசிக்கு பச்சைத்தண்ணீரை அவள் கொடுத்தாலும் அதில் அவளின் இரத்தமல்லவா கலந் திருந்தது.

சின்னச்சின்ன வேலைகளை வெள்ளையம்மாவிற்கு அவர்கள் ஓடிஓடிச் செய்தார்கள். அவர்கள் செய்கிற வேலைகள் அவளின் வேலைப் பழுவில் பெரிய

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மாற்றத்தைச் செய்யாவிட்டாலும் அதில் வெள்ளையம் மாவிற்கு ஒரு பரம திருப்தி. ஒரு விதமாக வீடும் தோட் டமும் வயலுமாக வெள்ளையம்மாவும், பள்ளிக் கூடமும் வேலைகளுமாக பிள்ளைகளும் அவர்களின் காலம் ஒருவாறு ஓடியது. யாரிடமும் வெள்ளையம்மா அவர்களை கை யேந்த விடவில்லை. அம்மா பிள்ளைகளுக்குச் சுதந்திரம் கொடுத்திருந்தாள். மற்ற அம்மாக்களைப் போல் அவள் அவர்களை எதற்கும் கட்டுப்படுத்தவில்லை.

வேலை நெருக்கடிகளில் காலம் போனதை அவர்கள் யாரும் கவனிக்கவில்லை.

மஞ்சு 'வளர்ந்து' விட்டாள். உடலிலும் உள்ளத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டன. அண்ணனவை மஞ்சுவுக்கு மேலே படித்துக் கொண்டிருந்தார்கள். மஞ்சு உலகத்தைப் பார்த் தாள். சமுகத்தைப் பார்த்தாள். தன்னைச் சுற்றி நடப்ப வைகள் ஒவ்வொன்றையும் கூர்மையாகக் கவனித்தாள்.

மஞ்சு பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். தங்களது வாழ்க்கையில் மாறுதல்கள் ஏற்பட்டதை மஞ்சு புரிந்து கொண்டாள். வெள்ளையம்மா சுதந்திரம் கொடுத் தாலும் வெளியில் சுதந்திரம் இல்லை என்பதை உணர்ந்து கொண்டாள்.

மஞ்சு 'ரியூசனுக்கு' போகிறவள். இரவு வகுப்பு முடிந்து வந்து எல்லோரும் 'பஸ்ஸிற்கு நிற்பார்கள். அப்போ கூட் டங்களாக பிள்ளைகள் சேர்ந்து பகிடி விட்டுச் சிரிப்பார் கள். இதைப் பார்த்து கொஞ்சம் வயதானவர்களுக்கு குமட் டிக் கொண்டுவரும். எரிச்சல் எரிச்சலாக இருக்கும். ஒரு மாதிரி முறைத்துப் பார்ப்பார்கள். இவர்களோ எதையும் கவனிக்காதவர் போலஇருப்பார்கள். இரவுநேரம்எண்டாலும் ஒரே கும்மாளம்தான். கொஞ்சக்காலம் இப்படித்தான்.

பிறகு .

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பிறகென்ன தூரத்தில பெரிய வாகனம் இரைந்து கேட்கும். இப்ப ஏன் .சோலி என்று பெரியவர்கள் இல்லை. எல்லாம் இளசுகள் தான். சிரிப்பொலிகள் நன்றாகக் குறைந்துவிட்டன, அந்த 'பஸ்ராண்டில்' நிக்கிற 'சைக்கிள்'கள் எல்லாம் பறந்துவிடும். 'பஸ்'ஸிற்கு நிக்கிறவை மட்டும் ஒண்டும் செய்யேலாமல்... அப்படியே ஒன்றாகக் குவிந்து நிற்பார்கள், சத்தம் கிட்டக்கேட்கும். மூன்று அல்லது நான்கு வாகனங்கள் நிரையாய் வரும். பார்க்கப் பயமாய் இருக்கும். எல்லாம் ஒரே நிறமாக... வாகனங்கள் இரண்டு தடவை பஸ்ராண்டை பெரிய சத்தத்துடன் சுத்தி விட்டு உறுமலுடன் பெண்களின் பக்கமாய் வந்து நிற்கும். எல்லோருடைய இதயமும் என்றுமில்லாதவாறு வேகமாய் அடிக்கும். எல்லோரும் விறைத்தபடி ஆடாது அசையாது அப்படி அப்படியே... துப்பாக்கி மனிதர்கள் குதிக்கும் சத்தத்தில் எல்லோரது மூச்சும் அடங்கிவிடும். அத்தனை உதடுகளும் ஒரு வசனத்தை உச்சரிக்கும், ''கடவுளே 'பஸ்' கெதியாய் வரவேணும்'' என்பதே அது. சில நேரங்களில் இவர்களின் வகுப்பு மாணவர்கள் அந்த வாகனத்துள் ஏற்றப்படுவார்கள். பெண் பிள்ளைகளைச் சுற்றி துப்பாக்கி வேலி அமைக்கப்பட்டிருக்கும். வெளியே ஒன்றுமே தெரியாது. புரியாத பாசையில் ஏதோ சொல்வார்கள். சிறிது நேரத்தின் பின் செல்வார்கள். ஒவ்வாரு நாளும் இப்பிடித்தான் பயந்தபடி... இரவு சாப்பிடும்போதுகளில் அவள் இவை எல்லாவற்றையும் வெள்ளையம்மாவிற்கு சொல்லி இருக்கிறாள்.

கொஞ்சக் காலத்தில் மஞ்சுவிற்கு 'ரியூசனே' வேண்டாமென்றாகிப் போனது.

''நான்பள்ளிக்கூடத்திலை கவனமாய்ப் படிப்பன்'' என்று சண்டை பிடித்தாள். ஒரு மாதிரி ரியூசனுக்குப் போகாமல் நிற்க வெள்ளையம்மா அனுமதி கொடுத்து விட்டாள். இப்ப மஞ்சு பள்ளிக்கூடம் மட்டும்தான்.

சில மாதங்கள்தான் சென்றன.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வாகனங்கள் பள்ளிக்கூடம் வந்து சென்றன. இந்த நிகழ்வுகளுக்கெல்லாம் மஞ்சுவுக்கு காரணம் தெரியாது. அறிய வேண்டும் என்று விருப்பம். பள்ளிக் கூடத்தில் சினேகிதிகளிடம் கேட்டாள். பெரிதாக ஒருவரும் இவளது கேள்வியை அலட்டிக் கொள்ளவில்லை ஆனால் மஞ்சுவிற்கென்று இரண்டு பேர் கிடைத்து விட்டார்கள். அவர்களும் மஞ்சு போலத்தான். எல்லோருமாக விடைதேடினார்கள். நின்றவர் போனவர் எல்லோரையும் கேட்டார்கள் நீண்டகாலமாக விடை தேடிக் கொண்டிருந்தார்கள்.

தேடிய போது துண்டுப் பிரசுரங்கள் கிடைத்தன. புத்தகங்கள் கிடைத்தன விடை தெரிவதுபோல இருக்கும். இடையில் சந்தேகங்கள் எழுந்து நிற்கும். சந்தேகங்களை தெளிவு படுத்த இன்னும் தேடினார்கள். விளக்கக்கூட்டங்களுக்குப் போனார்கள் அவர்களின் முகங்களில் எதையோஅறிந்து கொண்ட தெளிவு இருந்தது.

இவை எதையும் மஞ்சு வெள்ளையம்மாவிற்கு மறைக்கவில்லை. கேள்வி கேட்டாள். வெள்ளையம்மாவிற்கு ஒண்டும் சொல்லமுடியாது. பிறகுதானே விளக்கங்கொடுப்பாள். வெள்ளையம்மாவிற்கு ஒருவிதமாய் என்னவோ மாதிரி இருக்கும். முகத்தில் திடீரென ஒரு மாற்றம் இருக்கும். ஆனாலும் அவள் வெளிக் காட்ட மாட்டாள் வெள்ளையம்மாவின் செல்லப்பிள்ளை அவள் வெள்ளையம்மாவின் முகம் மாறுவதை அவள்தாங்க மாட்டாள் வெள்ளையம்மா பேசாமல் இருந்துவிடுவாள். அண்ணன் மார் கண்டிப்பார்கள். ஆனாலும் அவ்வளவாக இல்லை, ஒரே அன்புத் தங்கை தானே அவள்.

இப்ப மஞ்சுவிற்கு பூரணமாக விடை தெரியும். போராட வேணும். அப்ப பெண்கள் செய்யக் கூடியவையை மஞ்சுவும் செய்தாள். ஊர்வலங்கள் உண்ணாவிரதங்களுக்குச் சென்றாள். பெண்களை அணிதிரட்டி அவர்களுக்கு விளிப்புணர்ச்சியை ஏற்படுத்தினாள். இவர்கள் மூலம் உற்

Tamileelam Archive

பத்தி வேலைகளில் பங்கேற்றாள். காவலரண்களுக்கு அருகில் நின்று முதலுதவி செய்தாள். ஊர்வலங்களிற்கும் உண்ணாவிரதங்களுக்கும் இன்னும் சில வேலைகளுக்கும் வெள்ளையம்மாவும் கூடச் செல்வாள். பிள்ளைக்காக பிள்ளையின் விருப்பத்திற்காக போய்வந்தாள்.

முந்தி 'பஸ்ராண்டில்' நடந்ததை விட மோசமாக இப்ப வீட்டுவாசலில் நடக்குது. முன்னுக்கும் பின்னுக்கும் குண்டுகள் விழுகின்றன. சனங்கள் எல்லாம் ஓடிவிட்டார்கள். வெள்ளையம்மாவிற்கும் ஓடவேணும் போலத்தான் இருந்தது. ஆனால் மஞ்சு? அவள் மாட்டேன் என்கிறாள். உணவுப் பொட்டலங்களோடும், முதலுதவிப் பெட்டிகளோடும் அவள் முன்னேறுகிறாளே வெள்ளையம்மா ஓண்டுஞ் செய்ய எலாமல் நிண்டாள்.

ஆண்பிள்ளைகளைப் பற்றி வெள்ளையம்மாவிற்கு கவலை இல்லை. அவர்கள் உழைப்புத்தேடி தங்கள் ஊரை விட்டு சில நூற்றுக்கணக்கான மைல்கள் தள்ளி இருக்கின்றார்கள். ஊர்முழுக்க அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. இதற்குள் மஞ்சுவின் அந்த இரு தோழிகளும் காணாமல் போய்விட்டார்கள். அவர்கள் தேடிக் கொண்டிருந்த விடையை நோக்கி விரைந்து போய் விட்டார்கள். பாவம் மஞ்சு அவள் தவித்துப்போனாள். ஆனாலும் அவள் தன் வேலைகளை விட்டுவிடவில்லை. இன்னும் வேகமாகச் செய்தாள். அவள் வேலை செய்யும் சூழ்நிலை மிகவும் பயங்கரமானது. அவள் தொடர்ந்தாள்.

ஒரு சில மாதங்கள் தான் போயின.

அங்குல அங்குலமாக இருந்த துப்பாக்கி மனிதர்கள் மெல்ல மெல்லத் திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். துப்பாக்கிச் சத்தங்கள் நின்று போயிருந்தன. மஞ்சுவிற்கு விடுதலை கிடைத்துவிட்டதோ எனப்பெரிய சந்தோஷம். ஆனாலும் அவள் இப்போது சிறியவள் இல்லையே நிலமையைத் தெளிந்து விட்டாள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

புதிதாய் துப்பாக்கி மனிதர்கள் வந்தார்கள். அவர்களது மொழியும் புரியாத மொழிதான். அவர்கள் வந்த போது எம்மக்கள் பேசிக்கொண்டார்கள் ''இனிப் பயமில்லை உவங்கள் சுட மாட்டாங்கள்'' என்று. மஞ்சுவிற்கு சிரிப்பாய் வந்தது அவள் அதோடு வேதனையுங் கொண்டாள்.

''ஓம் ஓம் இவங்கள் இஞ்சை இன்னும் சுடத்தொடங்கவில்லை. அதுதான் எங்கட சனங்கள் சந்தோஷப்படுகுதுகள். கொஞ்ச நாள் போக எல்லாம் விளங்கும்'' மனதுக்குள் மஞ்சு சொல்லிக் கொண்டாள்.

அவள் தனது வேலைப்பயணத்தில் தன் தோழிகளைக் காண்கிறாள். அவர்கள் புதியவர்களாக. நம்பிக்கை யூட்டுபவர்களாக உடுப்பில் மாற்றம் அடைந்தவர்களாக ...துவக்கு வைத்திருப்பவர்களாக ஓ!எத்தனை மாற்றம். இவர்களுடைய துப்பாக்கிகள் வித்தியாசமானவை. ஏனென்றால், அவற்றை ஏந்தி இருப்பவர்கள் வித்தியாசமானவர்கள். மஞ்சுவும் அப்படித்தான் வர வேண்டியவள். ஆனால் ...அதுதானே தவறிவிட்டது. அவள் சலிப்படையும் போது நம்பிக்கையைத் தோழிகள் ஊட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தியாக அவள் மீண்டும் தன் வேலைகளில் தான் அநேகமாக இப்போது வெள்ளையம்மாவும் இந்த வேலைகளில் சற்று அதிகமாகவேதான் ஈடுபடுகிறாள்.

புதிதாக வந்த துப்பாக்கி மனிதர்கள் சுடத்தொடங்கி விட்டார்கள். தோழிகள் துப்பாக்கிகளோடு தேவைப்படும் இடத்துக்குச் சென்று விட்டார்கள். மஞ்சுவினால் இவ்வாறு போக முடியாவிட்டாலும் மனதினுள் ஒரு உறுதி பிறக்கிறது. ஏதோ ஒரு வகையில் தான் வாழ்வது இந்த மண்ணுக்காகத்தான் என்று.

இப்ப எல்லாம் அவளின் தோழியின் தோழர்கள் ஊரில் அவ்வளவாக இல்லை. ஆனால் வெள்ளையம்மாவின் வீட்டிற்கு மட்டும் அவர்கள் அடிக்கடி வந்து சென்றார்கள். அவர்கள் சரியாகக் கஷ்டப்பட்டார்கள். அவர்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ளுக்கு வருத்தம் வந்தால் வெள்ளையம்மா தன் பிள்ளைகளெனப் பராமரித்தாள். காயப்பட்டால் வைத்தியரைக் கூட்டி வந்தாள். அன்பாலும் ஆதரவாலும் இருவரும் குணப்படுத்தினார்கள். சாப்பாடு செய்து தூரத்திற்குச் சுமந்து சென்றார்கள். அவர்கள் செல்வதற்குப் பாதுகாப்பான பாதை காட்டினார்கள். சாமான்கள் வைத்து எடுத்துக்கொடுத்தார்கள். இந்த வேலைகளில் தாயும் மகளும் ஒருவருக்கொருவர் ஊக்கமாயிருந்தனர்.

இப்பவெல்லாம் முந்தி இந்தத் தோழர்கள் வரவேண்டும் என்று வாசலில் காத்திருந்தவர்கள் படலைகளை இறுகப் பூட்டி இருந்தார்கள். தூரத்தில் இவர்களைக் கண்டவுடன் தம் பாதைகளை திடீரென்று மாற்றிக் கொள்வார்கள். போதாததற்கு வெள்ளையம்மாவையும் மகளையும் போன்றோரை கேவலமாகத் திட்டிக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையிலும் வெள்ளையம்மாவின் வீடு அடைக்கலம் அளிக்கும் ஆலயமாக அந்தத் தோழர்களுக்கு இருந்து வந்தது. அந்தத் தோழர்கள் மஞ்சு வீட்டில் சாப்பிடும் போது சொல்வாகள்.

''இப்ப நாங்கள் உங்கடை சாப்பாட்டைப் பகிர்கிறது. இதற்காக எங்கடை சாப்பாட்டை (சயனைட்) நீங்கள் பகிர வேண்டி வரலாம்'' என்று

மஞ்சு சிரித்தபடி சொல்வாள்.

''அதற்கென்ன அப்படி வந்தால் பகிர்ந்து கொள்ளுவம்''

மஞ்சு அம்மாவுக்கு அடிக்கடி சொல்வாள்.

''எங்கடை வீட்டைச் சுற்றி என்றோ ஒரு நாள் அந்த அந்நிய நாய்கள் வந்து நிற்கும். அவர்கள் எங்களைத் தொட முதல் நாங்கள் இந்தக் கிணத்துக்கை விழுந்து செத்துப் போக வேணும் அம்மா'' என்று.

அன்றைக்கும் அப்படித்தான் முன்பின் தெரிந்திராத அந்தக் காச்சல்காரத் தம்பியை அவர்கள் கவனித்து விட்டுத் தம் தம் வேலைகளில்... அம்மாவும் மகளும்.

காச்சல் மாறிய போது அந்தத் தம்பி தன் வேலைகளுக்கு புறப்பட்டுவிட்டான். எட்போதும் பாதை பார்த்து விடுகின்ற வெள்ளையம்மா அன்று இல்லை. இவர்களுக்குத்தான் ஏதோ வாங்குவதற்காக கடைக்குப் போய்விட்டாள். மஞ்சு கிணற்றடியில் தண்ணீரை அள்ளிக் கொண்டு நின்றாள். அந்தத் தம்பி ஒரு கொஞ்சத்தூரம் போகவில்லை. இரண்டு பெரிய சத்தங்கள் அம்மாவையும் மகளையும் திடுக்குறச் செய்கின்றன. ஆனாலும் எங்கள் தேசத்தில் இப்போது இவை எல்லாம் வழமையான சத்தங்கள் தானே. அந்த இரண்டு சத்தத்தில் ஒன்று அந்தத் தம்பி எதிரிக்கு எறிந்த குண்டின் சத்தம்; மற்றயது தனக்குத் தானே வெடிக்க வைத்த சத்தம் என்புதை அப்போது அவர்கள் அறியவில்லை. தூசண வார்த்தைகளுக்கிடையில் அவளது பெயர் வெறித்தனமாக வெளியேறுவதைக் கிட்டக் கேட்ட போதுதான் சுற்றிவர அந்தத் துப்பாக்கி மனிதர்களோடு இந்த மண்ணின் வேட்டை நாய்களும் இணைந்து வந்ததை அவள் கண்டாள்.

சந்தோசமாக... ஆம் இந்த மண்ணிற்காக தான் சாவதை எண்ணிப் பெருமையுடன் அந்தத் தோழர்கள் கூறிய அவர்களின் உணவை அவள் பகிர்ந்து கொள் கிறாள்.

செய்தி கேட்டுப் பதறி அடித்து ஓடிவந்தாள் வெள்ளையம்மா. அவள் எந்த ஜீவனை என் உயிர் என்று போற்றினாளோ அந்த உயிர் அவளுக்கு முன் இப்போது இல்லை. எந்தப் பிள்ளையின் முகம் வாடக்கூடாது என்று வாழ்ந்தாளோ அந்தப் பிள்ளை வாடி வதங்கிப் பிணமாய்... உதட்டோரம் ரத்தம் கசிந்து முகம் சிறிது கறுத்திருந்தது. அவளுக்கு சாகவேணும் போல் இருந்தது. கத்தி அழக்கூட அந்த ஓநாய்கள் கட்டுப்படுத்தின. அவளின் மரணத்திற்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

குக் கூட அனேகம் பேர் இல்லை. அப்படி எங்கள் தேசம் அடிமைப்பட்டுக் கிடந்தது. ஆத்திரமடைந்த ஓ நா ய் க ள் அந்த அப்பாவித் தாயை அடித்து நொருக்கிச் சென்றார் கள். சோகமாக இந்தத் தேசத்திற்கு ஒரு செய்தி சொல் லப்படுகிறது.

ஊரெல்லாம் மெல்ல இதைக் குசுகுசுக்கிறது.

வெள்ளையம்மாவுக்கு எதுவும் கேட்கவில்லை. அவளின் கண்கள் எதையும் பார்க்கவில்லை.

தெரிந்ததெல்லாம் பிள்ளை பயணம் செய்த பாதை தான். அவள் செய்ய வேண்டியதெல்லாம் பிள்ளையின் பணிகள் தான்.

நினைவுகளின் அணிவகுப்பில் வெள்ளையம்மாவின் கண்ணில் இருந்து இரண்டு துளிகள்தான். கண் ணை த் துடைத்தவாறு சுற்றிவரப் பார்க்கிறாள். இறங்க வேண் டிய இடம் போய்விட்டதை அறிந்து தி டீ ரெ ன ''நிற் பாட்டு நிற்பாட்டு'' எனக் கத்துகிறாள். அவளுக்கு மஞ்சு எ ழு தி ய, தான் பொக்கிசப்படுத்திய அந்த, மஞ்சளாகிப் போன காகிதங்களைப் பார்க்க வேண்டும் போல. அதில் இந்தத் தேசத்தைப்பற்றித்தான் அவள் எழுதியிருந்தாள். வெள்ளையம்மாவைப் பற்றி ஒன்றும் இல் லை. இந் த எழுத்துக்கள் எ ல் லா ம் வெள்ளையம்மாவிற்குப் பாடம் தான். ஆனாலும் அவள் ஓடுகிறாள்.

ஆம், அவள் எதையும் பார்க்காமல் ஓடிக்கொண்டிருக் கிறாள்... ★

( பாரதியின் ஒரேஒரு சிறுகதை 'வெள்ளையம்மா' )

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி

காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி
காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி
காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி
காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி
காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி
காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி
காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி
காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி
காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி
காதோடு சொல்லிவிடு
மேஜர் பாரதி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வெளியீடு:

வெளியீட்டுப் பிரிவு

**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



உங்கள் பார்வையில்
விடியல் என்பதெல்லாம்
கண்ணைப் பறிக்கும்
வெறும்
விளக்கு வெளிச்சங்கள்தான்.
நாங்கள்
காணத் துடிப்பதெல்லாம்
கிழக்கு வானத்தின்
சிவப்பு விடியல்கள்.

தாசன் அச்சகம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive